விடுதலைப்புலிகள்

குரல் — 119 | புரட்டாதி — ஐப்பசி — 2004 | அன்பளிப்பு — 12/=

03 – தீர்வுகாணாதிருப்பதற்காக...
05 – அம்மையாரின் ஐ.நா உரையும்...
07 – அவர்கள் பிரச்சினை வேறு...
04 – இடைக்கால தன்னாட்சி...
08 – சிறிலங்காவின் நீதி நிர்வாகமும்...

# இ.த.அதிகாரசபை அடிப்படையின்றி பேச்சுக்கள் சாத்தியப்படப் போவதில்லை

**தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க - புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைதான் - அடிப்படையாக அமையமுடியும். இது புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.**

**இதற்கு மாறாக சிங்கள அரசு சமர்ப்பிக்க முற்படும் எந்தவொரு 'தீர்வுத் திட்டத்தையும்' புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது.**

**சிங்கள அரசுகளின் தீர்வுத் திட்டங்களுக்குரிய காலம் இப்போது காலாவதியாகிவிட்டது. அதனால்தான் புலிகள் இயக்கம் ஒரு மாதிரி வரைபை தயாரித்து அரசின்முன் வைத்துள்ளது.**

சமாதானப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக அமையவேண்டும் என்று சிங்கள அரசு விரும்பினால் இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை ஏற்க மறுப்பதென்பது சமாதான வழிமூலமான அரசியல் தீர்வுக்கு சிங்கள அரசு தயாரில்லை என்பதையே காட்டுவதாக இருக்கும்.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான ஆவணம் சர்வதேச சட்டவல்லுனர்களின் துணையுடன் தயாரிக்கப்பட்டது. சர்வதேச சட்டங்களையும் - நியமங்களையும் - ஜனநாயக பண்புகளையும் உள்வாங்கி, இலங்கைத்தீவின் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதாகும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னைரைப் போலல்லாது அர்த்தமுள்ளதாகவும் - தமிழ்மக்களின் ஆதரவுடனும் நடாத்தப்பட வேண்டும். போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மனிதாபிமான தேவைகளை மற்றும் அவர்களின் சுய பாதுகாப்பு - இயல்பான வாழ்க்கை என்பவற்றை நிறைவேற்றக்கூடிய ஒரு தற்காலிக நிருவாக அமைப்பு முறைதான் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையாகும்.

எனவே, சந்திரிகா அரசு குற்றம் சாட்டுவதுபோல அந்த இடைக்கால வரைபு பிரிவினைக்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என்பது உண்மைக்குப் புறம்பானதாகும். சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் - எந்தவித மூடிமறைப்புகளுமற்று தயாரிக்கப்பட்ட இந்த இடைக்கால வரைபை - சந்திரிகா அரசு - சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது அபத்தமானது. சர்வதேச சமூகத்தையும் சந்தேகிப்பதாக உள்ளது.

புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தைகள் அமையவேண்டும் என்பது தமிழ்மக்களின் அரசியல் ஆணையாகும். நாடாளுமன்றிற்காக அண்மையில் நடந்த பொதுத்தேர்தல் வாக்களிப்பின் வாயிலாக தமிழ்மக்கள் இந்த மக்கள் ஆணையை புலிகள் இயக்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

எனவே, இந்த மக்கள் ஆணைக்கு சந்திரிகா அரசு மதிப்பளிக்க வேண்டும்.

அதேவேளை, புலிகளின் இந்த இடைக்கால வரைபை அடிப்படையாகக் கொண்டு அமைதிப் பேச்சுக்களை சந்திரிகா அரசு ஆரம்பிக்கவேண்டும் என்று ஐ.தே.கட்சியே கோரியுள்ளது. தேவையேற்பட்டால் இதற்கான நாடாளுமன்றப் பலத்தை சந்திரிகா அரசுக்கு வழங்கி - உதவ தனது கட்சி தயார் என திரு. ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்துள்ளார். அத்துடன் தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற பிரதான கட்சிகளும் இதையேதான் சந்திரிகா அரசுக்குக் கூறி வருகின்றன.

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல முக்கியமான பல சிங்கள அமைப்புக்களும் புலிகளின் இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்குமாறு கோரிவருகின்றன. முன்னெப்போதும் கிடைத்திராத இந்த வரலாற்று வாய்ப்பை

***(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)***



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்

புலிகளின்குரல்

தமிழ் - சிங்கள இனப்பிரச்சினை இன்று சர்வதேச விவகாரமாக விஸ்வரூபமெடுத்துவிட்டது.

இருபது வருடங்களுக்கும் மேலாக இத் தீவில் நடந்துவரும் இனப்போர் சிங்கள இனத்திற்கும் ஒரு வரலாற்று உண்மையை சுட்டிக்காட்டிவிட்டது.

சிங்கள மேலாதிக்கத்திற்குப் பணியாத - சிங்களப் படைபலத்தால் அடிமைப்படுத்தப்பட முடியாத ஒரு பலம்வாய்ந்த தனித் தேசிய இனமாக தமிழ்மக்கள் உள்ளனர் என்பதே அந்த உண்மையாகும்

இந்த உண்மையை நிரூபிக்க தமிழினம் சந்தித்த அவலம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

தமிழ்த் தேசியத்தின் மீதான சிங்களத்தின் படையெடுப்புக்களை எதிர்கொண்டதுபோல, சிங்களத்தின் அரசியல் சூழ்ச்சிகளையும் தமிழினம் வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடித்து வந்துள்ளது.

தமிழரின் ஆயுதப்போராட்டம் முனைப்படைந்த போதெல்லாம் அல்லது சிங்கள அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தம் அதிகரித்த போதெல்லாம் அரசியல் சூழ்ச்சிகளை மேற்கொண்டு தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிங்களப் பேரினவாத அரசாங்கங்கள் சதி முயற்சிகள் செய்து வருகின்றன.

பேச்சுவார்த்தைகள் என்றும் தீர்வுத் திட்டங்கள் என்றும், அனைத்துக்கட்சி மாநாடுகள் என்றும் பாசாங்குகள் செய்து தமிழர்களை ஏமாற்றியும் - சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடாத்தியும் சூழ்ச்சிகர அரசியல் நடாத்திவருகின்றன.

சிங்கள அரசின் இத்தகைய கடும்போக்கால் எழுந்த தீவிர இனப்போரின் விளைவாக இனப்பிரச்சினைத் தீர்வின் மூக்கணாங்கயிறு சர்வதேச சமூகத்திடம் சென்றுவிட்டது.

இப்போது சர்வதேச சமூகமே இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு - தீர்வுதேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உருப்படியான ஒரு தீர்வை சிங்கள அரசு முன்வைக்க மாட்டாது என்றுணர்ந்த சர்வதேச சமூகம் ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு புலிகள் இயக்கத்தை கோரியிருந்தது.

புலிகளும் இடைக்காலத் தீர்வாக ஒரு திட்ட வரைபை தயாரித்து அரசிற்கு சமர்ப்பித்து வருடம் முடிந்துவிட்டது.

இத்திட்டவரைபை கிடப்பில் போட்ட சந்திரிகா அம்மையார் இப்போது திடீரென தேசிய ஆலோசனைச் சபை என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளார். அனைத்து கட்சிகளும் ஒரு மேசையில் அமர்ந்து - கலந்து பேசி அரசியல் தீர்வுக்கு ஆலோசனை பெறுவதுதான் அதன் நோக்கம் என்று அம்மையார் கூறியுள்ளார்.

அம்மையாரின் இந்த முயற்சி இனப் பிரச்சினையின் வரலாற்றை, ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளின் நடுப்பகுதிக்கு, பின்நோக்கி இழுத்துச்செல்வதாக உள்ளது.

அப்போது சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங்கம் ஒரு அரசியல் நாடகத்தை அரங்கேற்றியிருந்தது. உருப்படியாக எதுவும் செய்யாத - தோல்வியடைந்த அந்த முயற்சியைப்போலவே அம்மையாரும் இப்போது தேசிய ஆலோசனைச்சபை என்ற பெயரில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஆலோசனை பெற்று இனப்பிரச்சினையைத் தீர்க்க முனைவது போல இப்போது பாசாங்கு செய்யத் தொடங்கியுள்ளார்.

சர்வதேசத்தின் அனுசரணையுடன் சமாதானம் மலரும் என்ற நம்பிக்கை மலர்ந்துவந்த இந்த நேரத்தில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதுபோல சந்திரிகா அரசு உழுத்துப் போன அந்த பழைய - ஏமாற்று அரசியலுக்குள் புகுந்துகொண்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் சந்திரிகா அரசு எந்த அணுகுமுறையை தேர்ந்தெடுக்க முனைகின்றது என்பதை அவரின் இந்த முயற்சி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

அது, தமிழர்கள் அனைவரும் அறிந்த பேரினவாத தந்திரம்தான்.

காலத்தை இழுத்தடித்து - மெதுமெதுவாக பேரினவாத வெறியூட்டி - அதன்மூலம் சமாதானத்திற்கு ஆதரவான சிங்களக் கட்சிகளை - அமைப்புகளை பலவீனமாக்கி இறுதியில் இராணுவ அணுகுமுறை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுதேட முனையும் பேரினவாத அரசியலையே அம்மையார் நடாத்த எத்தனிக்கின்றார்.

இந்த நிலையில், தற்போதய சமாதான முயற்சிகளின் எதிர்காலம் இருளடைந்து காணப்படுகின்றது என்பதே தமிழ்மக்களின் கணிப்பாகும். அத்துடன், குண்டுகளும் - கொலைக் கருவிகளும் ஆட்சிசெலுத்தும் போர்க்காலத்திற்கே இலங்கைத் தீவை அம்மையார் இட்டுச்செல்ல எத்தனிக்கின்றார் என்றே தமிழ்மக்கள் கருதுகின்றனர். ●



## ஒளி கொடுப்பதற்காய் அணைகயிலே

உலகே...
உனக்குள்
ஒரு
புதிய சாதனை

உலகே
உனக்குள்
ஒரு
புதிய அதிசயம்

உறவுகளே
உங்களுக்குள்
ஒரு
பிரிவின் துயரம்

உறவுகளே
உங்களுக்குள்
ஒரு
புயலின் பயணம்

அறக்களமே
உனக்கொரு
புதிய
மகுடம்

அறக்களத்தின்
பிறப்புநாடே
உனக்கொரு
அவமானம்

ஈழ
நிலமே
உனக்குள்
ஒரு
புதிய வீரம்

ஈழ
நிலமே
உனக்குள்
ஒரு
பெரிய சோகம்

சாவே
வெல்வதற்காய்
நீ
அழைக்கப்பட்டாய்

சாவே
வெல்லமுடியாது
நீ
வெக்கப்பட்டாய்

விண்மீன்களே
எங்களிடம்
ஒரு
அற்புதத் தோழன்
வெந்துகொண்டிருக்கிறான்

விண்மீன்களே
உங்களிடம்
அந்த
அற்புதத் தோழன்
வந்துகொண்டிருக்கிறான்

புரட்சிப்
பறவையின்
சிறகு
தணிகிறது

புரட்சிப்
பறவைகள்
சிறகு
விரிக்கின்றன

பசியே
நீ
தோற்றாய்
சதியே
நீ
தோற்றாய்
பகையே
நீ
தோற்றாய்

ஒளி
கொடுப்பதற்காய்
அணைந்துகொண்டிருக்கிறது
திலீப தீபம்...

- செந்தோழன் -



www.eelamview.com

# தீர்வுகாணாதிருப்பதற்காக தீர்வுபற்றிப் பேசும் அரசியல்

கொழும்பின் அரசியல் என்பது தீர்வைப்பற்றி விஸ்தாரமாகக் கதைத்துக்கொண்டிருப்பதே தவிர பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதென்பதல்ல.

தீர்வைப்பற்றி, ஜனநாயகத்தைப் பற்றி, அரசியல் விழுமியங்களைப் பற்றிப் போலித்தனமாய் வானளாவப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு வித்தைதான் கொழும்பின் அரசியல் அட்டவணையாகும்.

**கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாய் இன ஒடுக்குமுறை பொறுத்து கொழும்பின் வேலைத்திட்டம் பின்வருமாறு உள்ளது. வாய்ப்பு ஏற்படும்போது ஈரடி முன்னால், நெருக்கடி ஏற்படும்போது ஓரடி பின்னால், ஸ்தம்பிதம் ஏற்படும்போது நின்ற இடத்தில் நிலைகொள்ளல் என்பதே சிங்களத் தலைவர்களின் வேலைத்திட்டமாகும். கூட்டிக்கழித்து மொத்தத்தில் எப்போதும் ஓரடி முன்னால் என்பதே அவர்களின் இலக்காகும்.**

கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாய் இன ஒடுக்குமுறை பொறுத்து கொழும்பின் வேலைத் திட்டம் பின்வருமாறு உள்ளது. வாய்ப்பு ஏற்படும்போது ஈரடி முன்னால், நெருக்கடி ஏற்படும்போது ஓரடி பின்னால், ஸ்தம்பிதம் ஏற்படும்போது நின்ற இடத்தில் நிலைகொள்ளல் என்பதே சிங்களத் தலைவர்களின் வேலைத்திட்டமாகும். கூட்டிக்கழித்து மொத்தத்தில் எப்போதும் ஓரடி முன்னால் என்பதே அவர்களின் இலக்காகும்.

தீர்விற்கான ஓரடியைத் தானும் கொழும்பு முன்வைத்ததில்லை; அதற்கான அர்ப்பணத்தை அவர்கள் வெளிக்காட்டியதுமில்லை; அதற்கான வேலைத்திட்டங்கள் எதனையும் அவர்கள் கொண்டிருக்கவுமில்லை. இதற்கான எத்தகைய நம்பிக்கைகளையும் அவர்கள் கட்டி வளர்க்கவில்லை.

இனவிவகாரம் பொறுத்து "நாங்கள் வேறு நீங்கள் வேறு" என்ற எண்ணப்பாங்கு கொழும்பு அரசியலில் ஸ்தாபதமடைந்துள்ளது. தமிழர் சம்பந்தமான எத்தகைய விவகாரங்களையும் தீர்மானங்களையும், எடுத்துக்கொள்ளும்போது சிங்களத் தலைவர்கள் அவற்றை ஒரு பகைமை நாட்டிற்கு எதிரான மன நிலையிலிருந்தே மேற்கொள்கின்றனர்.

- சாரணன் -

"தமிழருக்குப் பிரச்சினைகள் உண்டு"

"அவை தீர்க்கப்பட வேண்டும்"

"சமாதான வழியில் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்" என்று இப்படியெல்லாம் சிங்களத் தலைவர்கள் வாயளவில் கூறிக்கொண்டு செயலளவில் இவற்றிற்கு எதிரான போக்கைப் பின்பற்றுவதையே குறியாகக் கொண்டுள்ளனர். இதுவிடயத்தில் நல்மனங்கொண்ட தலைவர்கள் என்றும் தீய எண்ணங்கொண்ட தலைவர்கள் என்றும் வேறுபாடு காணக்கூடிய வகையில் வரலாற்று அனுபவம் அமையவில்லை. வார்த்தை வித்தியாசங்களைத் தலைவர்களிடையே காணமுடிந்தாலும் செயலில் அனைவரும் ஒரே இலக்கைத்தான் கொண்டுள்ளனர்.

முந்தியது பிந்தியதை வழிநடத்தும் அனுபவத்தொடர்ச்சி ஒன்றிலிருந்து இன்னொன்றிற்குக் கடத்தப்படும். அவ்வாறே கட்சி வேறுபாடுகளுக்கப்பால் முந்திய தலைவர்களின் செயற்போக்கால் பிந்திய தலைவர்கள் வழிநடத்தப்படுகின்றனர். முந்திய அனுபவத் தொடர்ச்சி அடுத்துவரும் செயலுக்கு கடத்தப்படுகின்றது. சிங்கள மக்களின் சிந்தனைப் போக்கும், அரசியல் போக்கும் தமிழ்மக்களிற்கு எதிரான ஒரு நிறுவன அமைப்பைப் பெற்றுவிட்டது. ஆதலால் தமிழ்மக்கள் பொறுத்து சிங்கள அரசியலுக்கென ஒரு தெளிவான கொள்கை இருக்கின்றது. தமிழ்மக்களை எதிரிகளாக எண்ணிக்கொண்டு அவர்களைத் தோற்கடிக்கவேண்டும் என்பதே அந்தக் கொள்கை.

பரிந்து பேசுதல், பிரச்சினையைப் பூதாகரமாக்குதல், ஒப்பந்தம் செய்தல், காலங்கடத்தல், பின்பு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிதல் என்பனவெல்லாம் 'சுதந்திர' இலங்கையில் பண்டாரநாயக்கா தொடக்கி வைத்த ஒரு மரபாகும். பிற்காலத்தில் இம்மரபினைச் சிங்களத் தலைவர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி புது மெருகுடன் பின்பற்றலாயினர்.



பண்டாரநாயக்கா உள்ளடக்கத்தில் ஒரு பிற்போக்காளர். ஆனால் அவரிடம் ஒரு முற்போக்கு மாயை இருந்தது. தந்தையை விடவும் மகள் மேலும் ஒருபடி மேலே சென்று புரட்சி மாயையுடன் காட்சியளித்தார். திருமதி சந்திரிகா விஜேகுமாரதுங்க தனது "சந்திரிகா பண்டாரநாயக்கா" என்ற அரசவம்சப் பெயருடன் புரட்சிபேசிப் பதவிக்கு வந்தார். இத்தகைய மனப்பாங்கிலும் உள்ளடக்கத்திலும் இருந்துதான் ஜனாதிபதியின் இனவிவகாரக் கொள்கையை ஆய்வு செய்யவேண்டும்.

இந்தவகையில் தீர்வு பொறுத்து ஜனாதிபதியின் கொள்கை என்ன என்பதைக் கண்டறிவதே எமது பிரதான விடயமாகும். முதலில் இனவிவகாரம் பொறுத்து ஒரு சுவாரசியமான அணுகுமுறை இருப்பதை அவதானிக்கலாம். அது இனவாதத்தின் ஒரு பரிணாமப் போக்காகும். முதலில் ஐ.தே.க விற்கும் சு.க.விற்கும் இடையேயான போட்டியில் இனப்பிரச்சினை மையங் கொண்டிருந்தது. எது எப்படியோ, விரைவில் ஒரு கட்சியை இன்னொரு கட்சி காட்டி ஒடுக்குமுறையை நடைமுறை ரீதியாக வளர்த்தெடுத்தனர்.

காலகதியில் ஒரு கட்சிக்குள் உள்ள தலைவர்களிடையேயான போட்டிக்குள் இனவிவகாரம் புகுத்தப்படலாயிற்று. குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பான காலப்பகுதியில் திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கும், திரு. ஆர்.பிரேமதாஸாவிற்கும் இடையேயான ஆளுமைப் போட்டியில் இன விவகாரம் உருட்டி விளையாடப்பட்டது.

கட்சிக்கும் கட்சிக்கும் இடையேயான போட்டிக்கு களமாயிருந்த இன ஒடுக்குமுறை பின்பு கட்சிக்குள் ஆளுமைப் போட்டிக்கான களத்திற்கு உந்தித் தள்ளப்பட்டது. இவ்வாறு இது அடுத்தகட்ட ஒடுக்குமுறைப் பரிணாமத்தைப் பெற்றது.

அடுத்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் கூட்டரசாங்கமே பதவிக்கு வரலாம் எனும் நிலை உருவானது. தற்போது கூட்டரசாங்கத்துள் அங்கம் வகிக்கும் இன்னொரு கட்சியான ஜே.வி.பியினை காரணங்காட்டி ஒடுக்குமுறையை நீடிக்கவல்ல வழியை இனவாதம் பெற்றுள்ளது.

இனவாதத்தைப் பொறுத்தவரையில் ஒடுக்குமுறை புரிவதற்கு ஒரு சாக்குப்போக்குத் தேவைப்படுகின்றது. எல்லா நிலைமைகளுக்குள்ளும் இனவாதமும் ஒடுக்குமுறையும் தொடர் வளர்ச்சியடைந்தே செல்கின்றன.

1994ஆம் ஆண்டு திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த காலத்தில் தீர்வு காணவல்ல வாய்ப்புகள் நிறையவே இருந்தன. அப்போது எதிர்க்கட்சி முற்றிலும் பலவீனமடைந்திருந்த காலம். கட்சிக்குள் ஜனாதிபதி திருமதி.சந்திரிகாவின் தலைமைக்கு சிறிதும் எதிர்ப்பற்ற முழுநிறை அங்கீகாரம் இருந்த காலம். சந்திரிகாவைச் சுற்றி 'ஒளி வட்டம்' இருந்த காலமது. தீர்விற்கான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாது சமாதானம் பற்றிய பெரும் மாயாஜாலப் பரப்புரைகளையே செய்தார். இறுதியில் யுத்தத்தைச் சமாதானத்தின் பெயரால் அவிழ்த்துவிட்டார்.

திருமதி.சந்திரிகாவுடன் நேரடியாகப் பழகி அவரது நேரடி வார்த்தைகளைக் கேட்டறிந்திருந்த முன்னணிப் பத்திரிகையாளர் திரு. டி.சிவராம் 10.10.2004 அன்றைய வீரகேசரி வாரமலரில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

**தீர்விற்கான ஓரடியைத்தானும் கொழும்பு முன்வைத்ததில்லை அதற்கான அர்ப்பணத்தை அவர்கள் வெளிக்காட்டியதுமில்லை அதற்கான வேலைத்திட்டங்கள் எதனையும் அவர்கள் கொண்டிருக்கவுமில்லை. இதற்கான எத்தகைய நம்பிக்கைகளையும் அவர்கள் கட்டிவளர்க்கவில்லை.**

"தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதன் மூலம் மட்டுமே இலங்கையின் இனச்சிக்கலைத் தீர்க்கலாம் என ஆணித்தரமாகக் கூறிவந்தவர் ஜனாதிபதி சந்திரிகா. கொழும்பில் என்னையும் எனது தோழர்கள் சிலரையும் தன்னுடைய வீட்டில் தங்கி, தென்னிலங்கையில் வேலை செய்வதற்கு அவரும் அவரது கணவரும் எமக்கு உதவி செய்தனர். அக் காலகட்டத்தில் 'தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்காதவர்களிடம் பேச்சு வைத்துக்கொள்ளாதே' என அவர் என்னிடம் கூறியதுண்டு...

"இப்படியாகவிருந்த ஜனாதிபதி சந்திரிகாவிற்கு என்ன நடந்தது? 'சமாதானத்திற்கான போர்' என்ற கொடுரத்தை தமிழ்மக்கள் மீது அவர் ஏன் ஏவிவிட்டார்?"

சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில் 'சமாதானம்' என்பது ஒரு யுத்தமுறை; பேச்சுவார்த்தை என்பது ஒரு யுத்தமுறை; ஒப்பந்தம் என்பது ஒரு யுத்தமுறை; தீர்வு என்பது ஒரு யுத்தமுறை; ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதும் ஒரு யுத்தமுறை; சமாதானத்திற்கான யுத்தமும் ஒரு யுத்தமுறை; மொத்தத்தில் தமிழ் மக்களிற்கு எதிரான ஒடுக்குமுறை மேற்படி அனைத்து வடிவங்களுக்குள்ளாலும் வெளிக்கிளம்புகின்றது.

தற்போது தீர்வு பொறுத்து ஜனாதிபதி சந்திரிகாவின் கொள்கை பின்வருமாறு உள்ளது. தீர்வு காணாது சமாதானம் பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பதையே பிரதான அரசியல் நடவடிக்கையாக மேற்கொள்வது, சமாதானத்தைப் பற்றி பெரிதாகப் பேசிக்கொள்ளும் அதே வேளை அதில் எழக்கூடிய பிரச்சினைகளைப் பூதாகரப்படுத்திக் காட்டுவது, ஜே.வி.பியினைச் சாக்குப் போக்காகச் சொல்லி தனது நாடகத்தை அரங்கேற்றிவிடுவது என்பனவாகும்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர்களையும் வேறு சிலரையும் கொண்ட குழுவொன்று திருமதி.பண்டாரநாயக்காவைச் சந்தித்திருந்தது. அக்குழுவில் அங்கம் வகித்தவர்களுள் ஒருவர் என்னிடம் பின்வருமாறு கூறினார்:

இனப் பிரச்சினையைக் கையாண்ட விதத்தில் தான் தவறுகள் இழைத்துவிட்டதாகவும், திரு. குமாரசூரியரின் ஆலோசனைகளே அத்தவறுகளுக்கு வழிவகுத்தன வென்றும், தனக்குத் தமிழர் பக்கமிருந்த ஒரு நல்ல ஆலோசகர் கிடைத்திருந்தால் தவறுகள் எதுவும் நடந்திருந்திருக்காதென்றும் திரு. பண்டாரநாயக்கா கூறியதாகக் கூறினார்.

அறுதல் கூறச்சென்ற இந்தக் குழு அவரது இந்த வார்த்தைகளை நம்பியதோ இல்லையோ என்பது வேறுவிடயம். தனது ஒடுக்குமுறைக்கான பொறுப்பை ஒரு தமிழனின் தலையிற்தான் போட்டுள்ளார் என்பதும், தனது ஒடுக்குமுறையை ஒரு விபத்து எனத்தான் அவர் காட்ட முற்பட்டுள்ளார் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

பழியைத் தலையிற்போட திருமதி.பண்டாரநாயக்காவிற்கு குமாரசூரியர் வாய்த்ததுபோல ஜனாபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு லக்ஷ்மன் கதிர்காமர் வாய்த்துள்ளார் என்பதை வரலாறு நிரூபிக்க இன்னும் அதிககாலம் தேவைப்படப் போவதில்லை.



www.eelamview.com

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA) குறித்த சிங்களத்தின் அருவருப்புக்கள்



**வி.அருளாளன்**

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளை நோர்வேயிடம் கையளித்து கிட்டத்தட்ட ஒருவருடம் பூர்த்தியாகப் போகிறது. சிங்கள மக்களை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த எண்ணக் கருக்களை உள்வாங்கும் நிலைக்கு ஆயத்தப் படுத்தாமலே இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் உள்ள விடயங்கள் அவர்கள் முன் வைக்கப்பட்டுவிட்டதாக இனப்பிரச்சினை சுமூகமாக தீர்வதில் ஆர்வம்கொண்ட சிங்களத் தரப்பினர் கூறுகின்றனர். தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் கிட்டத்தட்ட அனைத்து சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் எதிர்மறைப் பங்களிப்பையே வழங்கி வருகின்றார்கள். சுமூகமான தீர்வுக்கு இணக்கமான சூழ்நிலைகளை புலிகள் ஏற்படுத்தவேண்டும் என்று இத்தரப்பினர் கூறுகின்றனர். இந்த ஒருவருட காலத்தில் வெளிவந்த சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் சரி மேற்படி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவுகள் வெறும் முன்மொழிவுகள்தான், இவற்றை அடிப்படையாக வைத்து பேச்சுக்கள் நடக்கப்போகின்றன; அப்போது சமரசங்களுக்கும் விட்டுக் கொடுப்புகளுக்கும் இடமிருக்கலாம்; என்பதைக் கூறாமல், சிங்கள மக்களுக்கு பூச்சாண்டிகாட்ட முனைகிறார்கள். ஒருசில கல்விமான்கள் மட்டும் இணக்கமான சூழலை ஏற்படுத்தும் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இந்த மன வெளிப்பாடுகளையும் அவற்றின் முரண்களையும் அவை தொடர்பான தமிழர் தரப்பு நியாயங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பேச்சுவார்த்தை மூலம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்படுவதை பல வருடகால பிரிவினைவாதப் போரின்பின் நிகழும் மீள் இணைவுக்கான முன்னோடி நிகழ்வாகப் பார்க்கவேண்டும் என்று பேராசிரியர் ஜயதேவ உயங்கொட கருத்து தெரிவித்துள்ளார்.

''பொலிஸ், வரிவிதிப்பு, நிலம், நீதித்துறைத்கென புலிகளால் கோரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அநேகமான சமஷ்டி முறைகளின் அடிப்படை அம்சங்களாகவே இருக்கின்றன.

''வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்தி தேவைகளுக்கு அப்பாலும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையைப் புலிகள் கொண்டு போயிருப்பதால் இறுதித் தீர்வில் விவாதிக்கப்படவேண்டிய அடிப்படை விடங்களை (CORE ISSUES) புலிகளே முன்கொண்டு வந்திருக்கிறார்கள் இது பாராட்டப்பட வேண்டும் " என்று கூறியிருக்கும் தேசிய

> **சிறிலங்கா அரசியலமைப்புக்கு வெளியே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தீர்வுகாண முடியாது என்று கூறப்படுகிறது. அரசியலமைப்பு தீர்வுக்கு இணக்கமாக இல்லாவிடின் தீர்வுக்கு இணக்கமாக அரசியலமைப்பை மாற்றமுடியாத அளவுக்கு அது ஒன்றும் "Sanctum sanctor" (புனிதத்துக்குள் புனிதமானது) அல்ல. ஏற்கனவே 17முறை திருத்தியமைக்கபட்டிருப்பதுதான்.**

சமாதான கவுன்சில் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா, '' புலிகளின் கோரிக்கைகள் பரிவினைவாத இயல்பு கொண்டவையாய் இருக்கின்றன. உதாரணமாக ஆழ்கடல் மீதான அதிகாரங்கள் தொடர்பான முரண்பாடுகளை சர்வதேச நடுவர் மன்றத்துக்கு எடுத்துச் செல்லுதல் என்பது இருநாடுகளுக்கு இடையேதான் இடம்பெறும். ஒரே சமஷ்டியினுள் இருக்கும் இரு கூறுகளுக்கு பொருந்தாது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளவை பற்றிப் பார்ப்போம்: ''அரசு நிர்வாகத்தில் தமிழை நியாயமான அளவில் பயன்படுத்துவதில் தொடர்ந்து வந்த அரசுகள் தவறிவிட்டன. மக்கள் தங்கள் சொந்த மொழியைப் பயன்படுத்துவதைத் தடுப்பதென்பது ஒரு மனிதனின் அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும்.

''வடக்கு கிழக்குப் பகுதிகள் இரண்டு விடயங்களில், அதாவது -

01.தொடர்ச்சியான குறை அபிவிருத்தி

02.போர் ஏற்படுத்திய அழிவுகளும் படுநாசங்களும் என்பவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேற மறுப்பதால் 156 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. 144 பள்ளிகள் மரங்களின் கீழும் முறையாக நிர்மாணிக்கப்படாத கொட்டில்களிலும் நடைபெறுகின்றன. இடையில் விலகுவோர் தொகை 15வீதமாக இருக்கிறது. இது தேசிய சராசரியின் நான்கு மடங்காகும். 500 பாடசாலைகளும் கிட்டத்தட்ட 15,000 வகுப்பறைகளும் கடுமையாக சேதமுற்றுள்ளன. இரண்டு போதனா வைத்தியசாலைகளும் ஒரு பொது வைத்தியசாலையும் மட்டுமே இருக்கின்றன.

25 வீதம் சுகாதார நிலையங்கள் சேதமாகிவிட்டன. 50 வீதம் தாய்மார் மந்த போஷணைக் குட்பட்டுள்ளனர். 5 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களில் 50 வீதமானோர் குறைவான எடையை கொண்டுள்ளனர். பொதுவாகவே சிறுவர்கள் புற அதிர்ச்சிகளால் ஏற்பட்ட உளத் தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். (இவை ஆசிய உலக வங்கிகளின் கணிப்புகளாகும்)

''வடக்கு கிழக்குப் பகுதிகளின் 55 வீதம் விவசாயிகளுக்கு அவசியமான பசளைகள் மீதான தொடர்ச்சியான தடை, விவசாய உற்பத்தி திறனை சேதப்படுத்தியுள்ளது. படையினரின் தொடர்ச்சியான வலிந்த தாக்குதல்கள் உட்கட்டுமாணங்களை நாசமாக்கி விட்டிருக்கிறது. படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்களுள் பயிர்நிலங்கள் உள்ளன. மிகப் பெரும்பாலான பகுதிகளுக்கு மின்வழங்கல் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. தொலைத் தொடர்புகள் மற்றும் சேவைகள் செயற்படவில்லை.

''**கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆட்சிக்குவந்த அரசுகள் மிகக் குறைந்தளவு தீர்வுகளை மிகவும் காலம் கடந்து முன்வைத்துள்ளன.**

''ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்காகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களித்தார்கள். அரசின் முன்மொழிவுகளுக்கும் புலிகளின் முன்மொழிவுகளுக்குமிடையே, 70வீத விடயங்களில் ஒற்றுமை இருக்கிறது. 10வீதம் மேலதிக தெளிவுபடுத்தல் தேவை, 20வீத விடயங்களில் மட்டுமே பேசித் தீர்தல் அவசியமாக இருக்கிறது என்று அவர் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் EPRLF மாகாணசபை அமைச்சருமான தயான் ஜயத்திலக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து கூறியிருப்பவற்றை இப்போது பார்ப்போம்.

''இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை + புலிகளின் இராணுவம் + புலிகளின் கடற்படை = தனி நாடு,

புலிகளின் கடற்படை + புலிகளின் இராணுவம் இல்லாத இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஓரளவு மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளமுடியும்.

''ஒன்றை நேர்மையாக ஒப்புக் கொள்வோம். புலிகளிடம் துப்பாக்கிகள் இல்லாவிட்டால் சிங்களவர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றி கதைக்கக்கூட மாட்டார்கள்.'' என்கின்றார்.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பிரதான கட்சிகளின் நிலைப்பாட்டைப் பற்றி ஜெஹான் பெரேரா குறிப்பிடும்பொழுது, "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது பிரிவினைக்கான முன்மொழிவு என்று கூறி அதனை ஒட்டுமொத்தமாக நிராகரித்து இருக்கும் JVPயினர் இடைக்கால நிர்வாக அமைப்புக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

UPFAயின் கடும் போக்காளர்கள் போர்மூலம் புலிகளை ஒழித்துக்கட்டவே விரும்புகிறார்கள். JVPயின் தலையீடின்றி அமைதி முயற்சிகளை முன்நகர்த்தவே ஜனாதிபதி UPFA தலைமைப் பதவியில் இருந்து விலகினார். அந்த முயற்சிக்கு JVPயின் ஆதரவு கிட்டாது என்ற நிலையில், அடுத்த தெரிவாக UNP இருக்கிறது. SLFPயும் UNP யும் 50வருடம் பகையாளிகளாக இருந்தாலும் இரு கட்சிகளினுள்ளும் அமைதி முயற்சிகள் தொடர்பாக நெருக்கமாகவுள்ள முக்கிய குழுவினர் இருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். அதையும் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் தாம் அதற்கு ஆதரவு வழங்குவோம் என UNP அறிவித்துமுள்ளது.

ஐ.நாவில் பொருண்மிய விவகார அதிகாரியாகவும் (1990-2003) அதற்கு முன்னர் மண்ணியல் ஆய்வு திணைக்கள பணிப்பாளருமாக (1985-1987) பணியாற்றியவரான துலிப் ஜயவர்த்தன (DULIP JAYAWARDANE) என்பவர் இ.த.அதிகாரசபை வழங்கப்பட்டால் வளங்கள் இழக்கப்படும் அபாயம் பற்றி கவலைப்படுகிறார். (சண்டே ரைம்ஸ் 26.09.2004)

நிலம் :- சிறிலங்காவின் நிலப்பரப்பின் 30% பரப்புகள், குடிமக்களில் 10% மானவர்களுக்கு சொந்தமாகப்போகிறது.

கடல் :- கடல்வலய சட்டங்களின்படி 369,000ச.கி.மீ கடற்பரப்பும் 930,000ச.கி.மீ கண்டமேட்டு உரிமைகளும் இழக்கப்படும்.

காடு :- சிறிலங்காவின் மொத்த காட்டுப் பரப்பான 2மில்.ஹெக்ரேர் (1ஹெக் = 2.471ஏக்) இல் 15% அளவிலான 806,765 ஹெக்ரேர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் போய்விடும். கட்டுப்பாடற்ற காடழிப்பு மற்றும் குடியேற்றம் காரணமாக காடழிவு ஏற்படும்.

மீன்பிடி :- 1180கி.மீ நீண்ட கரையோரம் நெடுக உள்ள கடற்பரப்புகள், கண்டமேடுகளிலான மீன்பிடி உரிமைகள் இழக்கப்படும்.

கானுயிர் சரணாலயங்கள் இழக்கப்படுவதால், உல்லாசப் பயணத்துறை வருமானங்கள் இழக்கப்படும் என திரு.துலிப் கவலைப்படுகிறார்.

2002, ஒஸ்லோ மகாநாட்டில் சமஷ்டித் தீர்வுக்கு இணங்கி இருதரப்பும் வெளியிட்ட அறிக்கையில் வரலாற்று ரீதியாக தமிழர் வாழ்ந்த பகுதிகளில் உள்ளக சுய நிர்ணய கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த தீர்வொன்றை பெறவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. எனவே, புதிதாக ஒரு கோரிக்கை இங்கே எழவில்லை. நிலம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் கீழ் வரும்போது அது சார்ந்த கடலும் கண்டமேட்டு உரிமைகளும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்குக் கீழ் வருவது தவிர்க்க முடியாததாகும்.

கட்டுப்பாடற்ற காடழிப்புப் பற்றி கவலைப்படும் திரு.ஜயவர்த்தனவுக்கு ஒரு நாட்டில் மொத்தப் பரப்பில் 35% காட்டுப் பகுதியாக இருந்தாலே காலநிலைச் சமநிலை பேணப்படும் என்பது கட்டாயம் தெரிந்திருக்கும். வடமத்திய மற்றும் தென்பகுதிக் காடுகள் அழிக்கப்பட்டு, காலநிலைச் சமநிலை குலைந்திருப்பதும் அதேவேளை போரழிவுகளுக்கு மத்தியிலும் தமிழீழப் பகுதிகளின் நிலப்பரப்பில் 40% காடுகள் விடுதலைப்புலிகளால் கண்டிப்பாகப் பேணப்படுவதும் இவருக்கு தெரிந்திருக்காவிட்டால் அவரைப்பற்றி அனுதாபப்படுவதைத் தவிர வேறுவழியில்லை. இவர்களுக்கு இங்கு சுரண்டப்படும் வருமானம்தான் குறி. வருமானத்தில் எத்தனை சதவீதம் வட-கிழக்கு மக்களுக்கு செலவிடப்படுகின்றது என்பதில் அல்ல.

ஹெல உறுமயவுக்கு ஒரு காலத்தில் தலைவராக இருந்தவர் பச்சை இனவாதியான G.L.குணசேகர. அவர் அண்மையில் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த அருவருப்புகள்" (ABOMINATION ABOUT ISGA) என்ற நூலை எழுதியிருக்கிறார். கிழக்கு மாகாணத்தின் பின்தெனபத்து (99.4%), தெஹியத்த கண்டிய (98.8%), பதவி சிறிபுர (100%), கோமரங்கடவல (99.5%) ஆகிய இடங்களில் வாழும் சிங்களவர், கிண்ணியா (96.1%), அட்டாளைச்சேனை (93.12%), அக்கரைப்பற்று (96.3%) ஆகிய இடங்களில் வாழும் முஸ்லிம்களின் கதி என்ன என்ற கேள்வியை அதில் இவர் எழுப்பியுள்ளார்.

இவரது நூலுக்கு ஆய்வுரை எழுதியுள்ள பிரபல பத்தி எழுத்தாளர் ராஜ்பால் அபயநாயக்க (சண்டே ரைம்ஸ் -29.09.2004), எந்த ஒரு சமஷ்டி அமைப்பிலும் பிராந்திய சிறுபான்மையினருக்கான ஏதோ ஒரு ஏற்பாடு இருக்கும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். மட்டுமல்ல புலிகளை 'தமிழ் நாஸிகள்' என்றும், எது எப்படிப் போனாலும் புலிகளுக்கு ஒரு அங்குலம்கூட விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் இந்த "இனவாதச் சிங்களவர்'' கூறியிருப்பது குறித்த கருத்து தெரிவித்திருக்கும் அபயநாயக்க, "எது என்று அவர் குறிப்பிடுவது கூட்டுத் தேசிய துன்பமாகவோ, பரஸ்பர சுய அழிவாகவோ அல்லது மெதுவான சாவாகவோ இருந்தாலும் இவர்கள் கவலைப்படப் போவதில்லை" என்று கூறியிருக்கிறார்.

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளில் சிறிலங்கா அரசுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் குறித்து ''வெற்றிகொண்ட நாட்டுக்கு'' (CONQUEROR) அதாவது சிறிலங்காவிற்கு "வெற்றிகொள்ளப் பட்டவர்கள்" (CONQUERED) அதாவது தமிழர்கள் வழங்கும் அதிகாரங்கள் இவை என்று திரு.குணசேகர எள்ளலாகக் கூறியிருக்கிறார்.

*(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)*

# அம்மையாரின் ஐ.நா உரையும் அவரது கபட அரசியலும்

**தீர்வுத்திட்டம் என்ற பெயரில் தமிழினத்தின் அடிமை சாசனத்தை தயாரித்தபோது அதை புலிகள் இயக்கம் ஏற்கவில்லை என்பதே உண்மை. அம்மையாரின் அந்த அரைகுறை தீர்வுப்பொதி தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டு – சிங்களக் கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டு இறுதியில் செத்துப்போனதுதான் வரலாறு. அதற்காக புலிகள் இயக்கத்தை அம்மையார் குற்றம் சொல்ல முனைவது உண்மைக்குப் புறம்பானது.**

இலங்கைத்தீவின் இனப் போருக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண மறுத்து, நீண்ட காலமாக போர்வெறி கக்கிவந்ததால் அம்மையாரின் மதிப்பு உலக அரங்கில் மங்கிப் போய்க் கிடந்தது. அபகீர்த்தி மிக்க ஒரு அரச தலைவி என்ற கெட்ட பெயரும் அவருக்கிருந்தது. இது காரணமாக இலங்கைத்தீவின் அதி உயர் பதவியை அம்மையார் வகித்த போதும் அவரை உலக நாடுகள் அணைத்து - கௌரவித்து உரைகள் ஆற்ற சந்தர்ப்பங்கள் வழங்கவில்லை. அரிதாக அவர் நடாத்திய வெளிநாட்டுப் பயணங்களும் சர்வதேச சமூகத்தால் கண்டுகொள்ளப்படவில்லை.

இந்த நிலையில், தற்போது தேக்கநிலை அடைந்துள்ள சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தைக் கொண்டு வரும் சர்வதேச முயற்சிகளில் ஒன்றாக அம்மையாரை சமாதானத்தின்பால் திருப்ப சர்வதேச சமூகம் முயன்றுள்ளது.

அதன் விளைவுதான் ஐ.நா சபையின் விசேட அமர்வொன்றில் கொள்கை உரையாற்ற அம்மையாருக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பமாகும்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தனக்கிருக்கும் அரசியல் அபகீர்த்தியைப் போக்க அம்மையாரும் முயன்றுள்ளார். தன்னை ஒரு ஆக்கபூர்வமான தலைவியாக - சமாதான விரும்பியாகச் சித்தரிக்க எத்தனித்துள்ளார்.

திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட இனிப்புச் சொற்கள் கொண்ட அம்மையாரின் ஐ.நா உரை சர்வதேச சமூகத்தை ஈர்க்கும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது.

ஜனநாயக வழிமுறைகளில் தமிழ் - சிங்கள இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வுகாணும் ஆவலுடன் தான் இருப்பதாக அந்த உரையில் தம்பட்டம் அடித்துள்ளார். தான் பதவிக்குவந்த நாளில் (1994) இருந்து சமாதானத்திற்காகப் பாடுபடுவதாகவும், புலிகள் இயக்கம்தான் சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்டவில்லை என்றும் பச்சைப் பொய் கூறியுள்ளார்.

சமாதான தேவதை என்ற வேடம்பூண்டு - மேடையேறி சிங்கள - தமிழ் மக்களைக் கவர்ந்து ஆட்சிக்கு வந்த அவர் அனைத்து சிங்களத் தலைவர்களையும் விட போர்வெறி மிக்க கொடூரமான ஆட்சியாளராக விளங்கியது தான் வரலாறாகிவிட்ட உண்மை.

தீர்வுத்திட்டம் என்ற பெயரில் தமிழினத்தின் அடிமை சாசனத்தை அவர் தயாரித்தபோது அதைப் புலிகள் இயக்கம் ஏற்கவில்லை என்பதே உண்மை. அம்மையாரின் அந்த அரைகுறை தீர்வுப்பொதி தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டு - சிங்களக் கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டு இறுதியில் செத்துப்போனதுதான் வரலாறு. அதற்காகப் புலிகள் இயக்கத்தை அம்மையார் குற்றம் சொல்ல முனைவது உண்மைக்குப் புறம்பானது.

தீர்வுத்திட்டம் என்ற பெயரில் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற அன்று அம்மையார் நாடகமாடினார். அதையே இன்றும் தொடர நினைப்பது அவரது அரசியல் மடமைத் தனத்தையே காட்டுகின்றது.

தற்போதய சமாதானப் பேச்சுக்களும் புலிகள் இயக்கத்தாலேயே தடைப்பட்டுப் போயுள்ளன என்றும் அவர் தனது உரையில் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆக்கபூர்வமான சமாதான முயற்சியில் புலிகள் இயக்கம் இறங்கியதும் - அதன் பயனாகப் போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டதும் - பலகட்ட பேச்சுவார்த்தைகள் நடந்ததும் உலகம் அறியும். பேச்சு முயற்சிகளின் உச்சக் கட்டமாக வரலாற்றில் முதல் தடவையாக புலிகள் இயக்கம் ஒரு இடைக்காலத் தீர்வு வரைபை சிங்கள அரசிடம் சமர்ப்பித்ததும் - அதை முன்னைய ரணில் அரசு பேச்சுக்கு ஏற்றுக்கொண்டதும் உலகம் அறிந்த உண்மைகளாகும்.

ஆனால், இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்க மறுத்து - கடும்போக்கான அரசியலை நடாத்தி சமாதானத்திற்கு சமாதிகட்ட முனைவது அம்மையாரே ஆகும்.

தற்போதைய சமாதான முயற்சியின் பிரதான தடைக்கல்லாக சந்திரிகா அரசே உள்ளது என்பது சர்வதேசத்தின் தெளிவான கருத்து. இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் உலக நிதி நிறுவனங்கள் - உதவி வழங்கும் நாடுகள் என்பன பேச்சுக்கு நிபந்தனையாக நிதியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றன. சமாதானத்திற்கு வரும்படியான சர்வதேச அழுத்தம் அம்மையாரின் அரசிற்கே உள்ளது.

உண்மைநிலை இவ்வாறிருக்க சமாதான முயற்சிகளின் தேக்கநிலைக்கு புலிகள் இயக்கத்தை அவர் குற்றம் சாட்ட முனைவது அவர் சமாதான அரசியலுக்கு இலாயக்கற்றவர் என்ற உண்மையையே சுட்டிக்காட்டுகின்றது.

புலிகள் இயக்கம் சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுகின்றது என்று அம்மையாரையும் - ஜே.வி.பி மற்றும் சிங்கள உறுமய கட்சிகளையும் அவரது அரசியல் கூட்டாளிகளையும் தவிர வேறெந்த உலக நாடுகளும் புலிகளை குற்றம் சாட்டவில்லை. புலிகளின் சமாதான நல்லெண்ணத்தை ஊக்குவிக்கவும் - பாராட்டவும் சர்வதேச இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்கு வந்து புலிகளின் உயர்பீடத்தினரை சந்தித்துச் சென்றவண்ணமுள்ளனர்.

புலிகளுக்கு எதிராக முன்னர் சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டியதுபோல தற்போதும் திரட்டி புலிகளை ஓரம் கட்டி மீண்டும் போரைத் தொடங்கவே சந்திரிகா அம்மையார் - ஜே.வி.பி அரசு முனைகின்றது.

ஆனால், இது நடக்கக்கூடிய விடயமல்ல. சர்வதேச சமூகத்திற்கு இப்போது உண்மைகள் நன்கு விளங்கிவிட்டன. சமாதானத்தின் எதிரிகள் இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் அல்ல தெற்கிலேயே உள்ளனர் என்ற அரசியல் உண்மை சர்வதேசத்திற்கு தெரிந்துவிட்டது.

சந்திரிகா அம்மையாரின் பசப்பான வார்த்தைகளும் - சதி அரசியலும் புலிகள் இயக்கத்திடமும் எடுபடமாட்டாது. சர்வதேசத்திடமும் எடுபடமாட்டாது.

அம்மையாரின் பேச்சிற்கும் - செயலிற்கும் உள்ள வேறுபாட்டை சர்வதேசம் நன்றாக உணர்ந்த தற்போதைய நிலையிலும் கூட தனது கபட அரசியலை அம்மையார் கைவிடுவதாக இல்லை.


1983 தமிழ் இனப் படுகொலையை தனது ஐ.நா உரையில் நினைவூட்டிய அம்மையார், அதற்காகத் தான் தமிழர்களிடம் மன்னிப்புக் கோரிவிட்டதாகவும் - அந்த இரத்தக் களரிக்கு ஐ.தே. கட்சியே பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

இது அம்மையாரின் வழமையான ஒரு பசப்பு வார்த்தைகளேயாகும். தன்னை ஒரு நேர்மையான அரசியல்வாதியாகக் காட்டவும் - ஒரு மனிதாபிமானம் மிக்க பெண் என்று கூறவுமே அவர் இவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆனால், வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட அந்த யூலைப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களைப்போல் பலமடங்கு தமிழர்களைக் கொன்ற நீண்ட, கொடிய போரை அம்மையார்தான் நடாத்தியிருந்தார். தான் நடாத்திய படுகொலைகளைப் புறந்தள்ளிவிட்டு ஐ.தே.கட்சி நடாத்திய படுகொலைக்கு மன்னிப்புக் கோருவது கேலிக்கிடமான அரசியலாக உள்ளது.

உலகை ஏமாற்ற அம்மையார் நடாத்திவரும் அரசியல் சித்து விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று.

அம்மையாரின் ஐ. நா உரையில் சமாதானத்திற்கு தடையாக தனது அரசு உள்ளது என்ற உண்மையை ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை. இது சமாதான விரும்பிகளுக்கு ஏமாற்றமளிப்பதாகவே இருக்கும்.




"துளிர்த்து வரும் நம்பிக்கைகள் சிதைக்கப்படும் போது அவை தாமாகவே குண்டுகளாக மாற்றமடைகின்றன." என்று அடக்கப்பட்ட மக்களுக்கு சார்பாக பரிந்து பேசுவதுபோல அம்மையார் காட்ட எடுத்த இந்த அரசியல் எடுகோள் தான் தலைவியாக இருக்கும் இலங்கைத் தீவிற்கும் பொருந்தும் என்பதை அம்மையார் புரிந்துகொள்ள வேண்டும்.

**– எல்லாளன் –**



www.eelamview.com

# “மீண்டும் வருவான் எனவே...”



## மேஜர் மில்ரன்

(நாகராசா தனசேகர்)

**தளபதி, புலனாய்வுத்துறை தாக்குதல் படையணி.**

பிறப்பு - 1972.01.31
வீரச்சாவு- 1996.07.18

“தனம் அத்தான் இருந்திருந்தால் அவனைத்தான் கலியாணம் கட்டியிருப்பன் இப்பவும் அவனை மாதிரி ஒரு கறுவலைத்தான் கட்டியிருக்கிறன்.” அவனது பள்ளித் தோழி விமலா அப்படித்தான் நினைவு கூருகிறாள்.

அவனது, அம்மாவின் மொழியில் கூறுவதானால், “அவனோட ஆரெண்டு இல்லை - எல்லோரும் வந்து ஒட்டிக்கொள்ளுவினம். அவன் ஊரில இருந்து ஓமந்தைப் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போகேக்க ஊர் பெடி, பெடிச்சியள் எல்லாரையும் அவன்தான் சாச்சுக்கொண்டு போறவன்.”

அவனது கறுத்த முகத்தில் அப்படி ஒரு வசீகரம் என்று சொல்வதைவிட உள்ளார்த்தமாக உண்மையாக, நேர்மையாக, உள்ளார்த்த அன்புடன் பழகிய அவனது உள்ளத்து அன்பே வசீகரத்தின் காரணமெனலாம்.

அவன் பிறந்து வளர்ந்த அவனது சொந்தக் கிராமத்தின் மூட நம்பிக்கைகளும் அவனுடன் சேர்ந்தே வளர்ந்திருந்தாலும்,

தன் பதினெட்டு வயதில் தேர்ந்தெடுத்த புரட்சிகரமான பாதை அவனுள் முற்போக்கான சிந்தனைக்கு வழிகாட்டியதென்றே கூறவேண்டும்.

அவன் போராளியாகி பொறுப்பாளனாகி சீ.டி -125 உந்துருளியில் வீட்டுக்குப் போனால், அங்கு இன்னமும் பழமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தன் அம்மா, அப்பாவுடன் புதுமை பற்றிய வாக்கு வாதங்கள்தான்.

“உந்தக் காட்டைக் கட்டிப் பிடிக்கிறதை விட்டுட்டு றோட்டுக்கு வாங்கோ” அவனது வீடு ஏ -9 வீதிக்கருகில் வருவதற்கு அவனது வாதம்தான் காரணமாயிற்று.

ஆரம்பத்தில் விவாதங்கள் இருப்பினும் பிற்காலத்தில் அவனது கட்டளையின் கீழ் ‘வீடு’ வந்ததென்றே கூறல் வேண்டும்.

அவனது கட்டளைகளில் பிரதானமானது “வீட்டுக்கு வாற போராளிகளுக்கு தேநீர் கொடுத்து, சாப்பாடு கொடுத்து அனுப்பவேணும். அவையளும் உங்கட பிள்ளைகள்தான்.”

இந்த உணர்வானது இயக்கத்தில் இணைந்த ஆரம்பத்திலேயே அவனிடம் குடிகொண்டிருந்தது.

1989 அவன் இயக்கத்துக்கென வந்து வருடம் ஒன்று கடந்திருந்தது.

பாலமோட்டை, கொந்தக்காரக்குளப் பகுதியில் அணி ஒன்றின் பொறுப்பாளனாய் அவன் நடமாடும் செய்தி, உறவினர் வாயிலாக பெற்றோரின் காதுகளை எட்டியது.

~ சி.மாதுளா ~

‘இந்தியப் படைகளினது கண்களில் மண்ணைத் தூவி நடமாடும் தன் பிள்ளையைப் பார்ப்பது அவ்வளவு உசிதமல்ல’ என்று தெரிந்தும் பெற்றோரின் மனசு அதற்கு இடங்கொடுக்கவில்லை.

தமது வசதிக்கேற்ப சிறு பலகாரப் பொதியுடன் அவன் நடமாடும் கிராமங்களில் அவனைத் தேடினர் பெற்றோர்.

சில வாரங்கள் கழித்து அவர்களிடம் அவன் வந்தான்.

“அம்மா, நீங்கள் என்னைத் தேடித் திரியிறது எனக்கு எப்பவோ தெரியும். என்னைக் காணவில்லை என நீங்கள் போவியள் எண்டு நினைச்சன். ஆனால் நீங்கள் என்னைக் கண்டுதான் போறதெண்ட முடிவோட நிக்கிறியள்... அம்மா, என்னைப்போலதான் என்னோட நிற்கிற பெடியளும் தங்கட அம்மா, அப்பாவைப் பார்க்காமல் நிக்கினம்... என்னை மட்டும் பார்க்க வந்திருக்கிறது சரியில்லை அம்மா. அதுவும் நான் இரு அணிக்குப் பொறுப்பாக இருக்கிற இந்நிலையில்... நினைக்கவே மனம் ஏற்குது இல்லையம்மா.”

அவனது முதிர்வான சில நிமிடப் பேச்சு அம்மாவை கண்கலங்கி நிற்கவைக்க...

“அம்மா நான் போயிற்று வாறன் - உந்தப் பலகாரப்பொதி எங்கள் எல்லோருக்கும் போதாது - இனி சந்தர்ப்பம் கிடைச்சா எல்லோருக்கும் சேர்த்துச் செய்து வாங்கோ” அவன் சென்று அடர்ந்த காட்டினுள் முழுமையாக மறையும்வரை அம்மா பார்த்துக் கொண்டேயிருக்க,

“அவன் போராட என்று புறப்பட்டவன், தன்ர கடமையை முடிச்சு வீட்டுக்கு வருவான்” என அப்பாதான் அம்மாவின் கையைப் பிடிச்சு கூட்டிவந்தார்.

அம்மா சந்திச்சு சில மாதங்களின் பின்பு, “கொந்தக்காரகுளப் பகுதியில இந்தியனாமிக்கும், எங்கட பெடியளுக்குமிடையில சண்டையாம், பெடியளிலையும் இழப்பாம்” அயலவரின் செய்தியால் அம்மா ஒடிந்துபோனா. அம்மாவை நிமிர்த்தும் செய்தி சிலவாரங்கள் கழித்துத்தான் வந்தடைந்தது.

அந்தச் சம்பவம் பற்றி அவன் இப்படித்தான் விபரிப்பான், “சுடலைக்குள்ள கிடந்தால் ஆரும் வரமாட்டாங்கள் எண்டு சுடலைக்க கிடக்கப் போய், இந்தியன் ஆமி ‘பிறன்’ எல்.எம்.ஜீயால போட்டானே ஒரு போடு. சன்னம் ஒண்டு என்ர கையை முறிச்சுக்கொண்டு போயிற்று. அதில இருந்து இந்தியன் ஆமிக்கு நாங்கள் வைச்ச சங்கேதப் பெயர் (CODE NAME) ‘சுடலைப்பேய்.’

அந்த நேரத்தில், அடர்ந்த காட்டினுள் உள்ள முகாம்களுக்கான வழங்கல்கள் அனைத்தும் நகருக்குள்ளிருந்து, கிராமப்புறத்துக்காகி அங்கிருந்து முதுகுச் சுமையில்தான் காட்டினுள் செல்லும்.

நிலத்தில் கொட்டுண்டும் தானியங்களை காட்டுக்கோழி அல்லது மயில் பொறுக்காது விடின், ஐம்பது கிலோ அரிசிக்காகக்கூட இரத்தம் சிந்தவேண்டிய அபாயகரமான சூழலில் அவனது முள்ளந்தண்டும் நூற்றுக்கணக்கான மூட்டைகளைச் சுமந்து போராளிகளுக்கான வழங்கல்களை எடுத்துச் சென்றிருந்தது.

இறுக்கமான அந்தப் போர்ச் சூழலில் ஊருக்குள் நடமாடும்போது அசாதாரணமான மறைப்பிடமே வாழ்விடமாக மாறும். நான்கு அடி சதுர இடத்தினுள் ஆறடி உடலை மறைத்து துயிலவேண்டிய நிர்ப்பந்தம் எழும். அப்பொழுதுகளில் எல்லாம், “ஆம்பிளப்பிள்ளை எண்டால் காலை நீட்டி நிமிர்ந்து படுக்கவேணும் எண்டு அப்பா அடிக்கடி சொல்லுவார்.” “இப்ப அப்பா வந்து பார்த்தார் எண்டால் ‘ஆம்பிளப் பிள்ளையெண்டால் குறண்டிப் படுக்கவும் பழகவேணும்’ எண்டு சொல்லுவார்.” என முடிப்பான்.

கடினமான வாழ்வை, இக்கட்டான ஆபத்தான நிலைமையை, தளம்பாது மகிழ்வுடன் ஏற்றுக்கொள்பவனே போராளி என்ற தகுதியைப் பெறுவான் என்ற அடிப்படையில் அவனிடமும் ‘அது’ நிரம்பியே காணப்பட்டது.

**அவனது அம்மாவின் மொழியில் கூறுவதானால் “அவனோட ஆரெண்டு இல்லை - எல்லோரும் வந்து ஒட்டிக்கொள்ளுவினம். அவன் ஊரில இருந்து ஓமந்தைப் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போகேக்க ஊர் பெடி, பெடிச்சியள் எல்லாரையும் அவன்தான் சாச்சுக்கொண்டு போறவன்.”**

அதனால்தான் மாங்குளம், கனகராயன்குளம், பன்றிக்கெய்தகுளம் என தன் அணியை வழிநடத்தி இந்தியப் படையினருடன் போரிட அவனால் முடிந்தது.

இந்தியப் படைகள் எமது மண்ணைவிட்டு வெளியேற்றப்பட்ட 1990களில் புலனாய்வுத்துறைக்குள் உள்வாங்கப்பட்ட போராளிகளினுள் அவனும் ஒருவன்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் கைக்கூலிகளாய்ச் செயற்பட்டோர், இன்னும் செயற்பட இருப்போரை களைந்து போராட்டத்தை வீறுகொள்ள வைக்கவேண்டிய பாரிய பொறுப்பு புலனாய்வுத்துறையின் மிக முக்கிய பணியாகியபோது,

அவை சார்ந்த பணிகளே அவனுக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்டதெனினும், அவன் தன்னை போர்க்குணம் மிக்க போராளியாக உருவாக்கியிருந்தமை, புலனாய்வுத்துறைச் சண்டை அணித் தளபதிகளில் ஒருவனாக அவனை மாற்றியது.

போர்க்குணத்துடன் (MORALE) உற்சாகத்துடன் போராளிகளை வைத்திருந்து வழிநடத்துவது, என்பதில் லெப்.கேணல் கோபியைப்போல் அவனும் பேசப்பட வேண்டியவனே.

இந்தியப் படையுடனான போர்க் காலத்தில் எதிரியின் வரவை எதிர்கொள்வதற்காய் துப்பாக்கியின் விசை வில்லினுள் சுடுவிரலை வைத்தபடியே நடமாடும் அவனது விழிப்புணர்வு அவனது வாழ்வில் தொடர்கதையே.

“துப்பாக்கியை விட்டுட்டு விலகக்கூடாது...

“படுக்கும்போது துப்பாக்கி எடுக்கக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும்...”

போன்ற கட்டளைகளுடன் கோல்சர் கட்டும் முறை, துப்பாக்கி வைத்திருக்க வேண்டிய முறை, அதன் துப்பரவு, பயிற்சிகள், தண்டனைகள் என தனது போராளிகளை எப்போதும் உசாருடனேயே வைத்திருப்பான்.

இந்தியப் படையினரின் பதுங்கித் தாக்குதலில் தன் துப்பாக்கியை இழந்த ஆனந்தன் - பிறிதொரு நாள் இந்தியப் படையினரிடமிருந்து துப்பாக்கி ஒன்றினை கைப்பற்றுவதற்காகத் தன் உயிரையே இழந்த கதையை, அவன் தன் போராளிகளுக்கு அடிக்கடி நினைவு படுத்துவான்.

இந்தியப் படையினருடனான சண்டையில் முறிந்த கை வீங்க வீங்க சக போராளிகளுடன் இணைந்து பங்கர் வெட்டுவது தொடக்கம் சமையல் வரை போராளிகளுடன் ஒருவனாக நிற்பான்.

எதிரி ‘எவ்வாறெல்லாம்’ நகருவான் நாம் ‘எவ்வாறெல்லாம்’ பதிலடி கொடுக்கவேண்டும், அவை பற்றிய கதைகளைத் தவிர அம்முகாமில் வேறு கதைகள் வருவது மிகக்குறைவு.

போராளிகளுக்குரிய நேரத்திட்டமிடலை அவனேதான் போட்டுக் கொடுத்து, அவர்களுடன் நின்று பணியினைக் கவனிக்கும் அவனது செயல், லெப்.கேணல் கோபியின் வழிகாட்டலில் கற்றுக் கொண்டதொன்று.

புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரின் பாதுகாப்பு அணியினை

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)






www.eelamview.com

# ISGA:



# அவர்கள் பிரச்சினை வேறு எங்கள் பிரச்சினை வேறு

இலங்கை அரசியலில் புலிகள் முன் வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபினால் (ISGA) சொர்க்கத்திற்கான பாதை அடைபட்டுவிட்டது போலவும், புலிகள் கொஞ்சம் நெகிழ்ந்து கொடுத்துவிட்டால் சொர்க்கத் துக்கான பயணம் கைகூடிவிடும் என்பது போலவும் கொழும்பு 'பந்தா' பண்ணுகிறது.

தெற்கின் அநேகமான ஆங்கில, சிங்கள ஊடகங்களுக்கும் இப்படிப் பண்ணு வதில் ஏதோ தனிச்சுவை இருக்கிறது. புலி களை வலையுள் சிக்கவைத்து சிங்கள அரசை ஒரு தர்ம இராச்சியமாக நியாயப்படுத்தி சர்வதேசத்திடமிருந்து புலிகளைத் தனிமைப் படுத்த மிக உன்னதமான இராஜதந்திர காரிய மொன்றை வரலாற்றில் தாங்களே நடத்தி வருவதாய் ஒரு சுய பெருமிதப் போதை இவை களுக்கு.

சமாதான காலத்தின் தொடக்கத்தில் ஏ9 நெடுஞ்சாலையைத் திறந்துவிட்டு தமிழ் மக்களுக்கான சொர்க்கத்தின் பாதையைத் திறந்துவிட்டதுபோல கொழும்பு பண்ணிய பந்தாவை வாசகர்கள் இன்னும் மறந்து விட்டிருக்க மாட்டார்கள்.

நாங்கள் இங்கு வெளிப்படையாக - பச்சையாகப் பேசுவோம். இலங்கையின் மைய அரசியல் இன்று எதனில் தங்கியிருக்கிறது. அவர்கள் பாவனை பண்ணுவதுபோல சமா தானத்திலும் சமாதானத்தில் புலிகள் சமர்ப் பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபிலுமா தங்கியிருக்கிறது? அல்லவே அல்ல. வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலே இன்று கொழும்பின் மைய அரசியலாக இருக் கின்றது. சமாதானத்தில் அது இருப்பதாக பண்ணும் பந்தாதான் இன்றைய அரசியலாக இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டுதான் இலங்கையில் இன்று எல்லாக் கட்சிகளிடையேயும் எல்லாத் தலைவர்களிடை யேயும் எல்லாவித அரசியல் நகர்வுகளும் செய்யப்படுகின்றன. நாட்டின் அரசியல் என்றா லும் சரி, உட்கட்சி அரசியல் என்றாலும் சரி அவற்றிற்கான எல்லாவித தீர்மானங்களும் ஜனாதிபதித் தேர்தலை வைத்தே எடுக்கப் படுகின்றன.

சர்வதேசம் கரிசனை கொண்டிருக் கும் சமாதானத்தை ஜனாதிபதித் தேர்தலில் தளமிட்டிருக்கும் இலங்கையின் மைய அரசி யலுக்கு சாதகமாக எப்படிக் கையாள்வது என்பதே எல்லாக் கட்சிகளுக்கும் உள்ள இன்றைய குறிக்கோள். அவற்றின் கவலையும் கவனமும்கூட அதுவே.

மூன்றாம் முறையும் ஜனாதிபதி யாவதற்குரிய மார்க்கத்தை சமாதானத்தைக் காரணமாக்கி கண்டறியமுடியுமா என்பதுதான் சந்திரிகாவின் கவலை. சந்திரிகாவை அந்த முயற்சியில் இருந்து தடுத்து வேறொருவரை அவர் தேர்தலில் நிறுத்துவதையும் தடுத்து எப்படி தான் ஜனாதிபதி வேட்பாளராகலாம் என்பது மகிந்த ராஜபக்ஷவின் கவலை.

ரணிலுக்கோ ஜனாதிபதித் தேர்த லில் வெல்லுவதன்மூலம் கட்சியின் ஸ்திரத் தையும் கட்சிக்குள் தனது ஸ்திரத்தையும் நிலைநிறுத்திப் பேணமுடிவதுடன் சில உதிரிக் கட்சிகளை பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதி அதிகாரத்தை வைத்து தம்பக்கம் கவர்ந்திழுத்திட வேண்டும் என்பதில் கவனம்.

**சர்வதேசம் கரிசனை கொண்டிருக்கும் சமாதானத்தை ஜனாதிபதித் தேர்தலில் தளமிட்டிருக்கும் இலங்கையின் மைய அரசியலுக்கு சாதகமாக எப்படிக் கையாள்வது என்பதே எல்லாக் கட்சிகளுக்கும் உள்ள இன்றைய குறிக்கோள். அவற்றின் கவலையும் கவனமும்கூட அதுவே**

கரு ஜெயசூரியவுக்கு நடந்த தோல்விகளை வைத்து, கட்சிக்குள் தனது ஆளுமையை நிறுவி தேர்தலில் தான் வேட்பாளராக நின்று விட வாய்ப்பு வராதா என்று கவலை.



ஜே.வி.பிக்கு ஜனாதிபதித் தேர்தல் வரை தனது எல்லா குரல்களுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பால் சந்திரிகா செவி மடுத்தே ஆகவேண்டும் என்பதை பணயமாக்கி எதிர்கால அரசியலுக்கான எல்லாவற்றையும் அறுவடை செய்துவிடவேண்டும் என்பதில் கவனம்.

ஏனைய கட்சிகளுக்கு ஜனாதிபதித் தேர்தலை வாய்ப்பாக்கி உயர்ந்தபட்ச பேரம் பேசுதலில் இறங்கிவிடவேண்டும் என்ற ஆர்வத்தில் நிபந்தனைப் பட்டியல் தயாரிப்பதில் கவனம்.

இந்தக் கவலையிலும் கவனத்திலும் தான் சமாதானம் எடுத்தாளப்படுகின்றது. சமா தானத்தில் புலிகள் வைத்திருக்கும் இடைக் காலத் தன்னாட்சி அதிகார வரைபும் இந்த அர்த்தத்தில்தான் கையாளப்படுகின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைபை ஏற்பது, கண்டிப்பது, நெகிழ்வது, நிராகரிப்பது மற்றொன்றைக் கோருவது, வேறு மார்க்கங்கள் தேடுவது, ஒத்துழைப்பதுபோல் ஒப்புக்கொள்வது, அதை ஒத்துக்கொண்டது போல் ஒத்துழைக்காதது. என எல்லாமே ஜனாதி பதித் தேர்தலுக்காக தத்தம் எதிரிகளை சுற்றிவளைக்கும் அல்லது தோற்கடிக்கும் மார்க்கமே.

அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை சிங்கள அரசியலில் தத்தம் எதிரியை வீழ்த்துவதற்கும் சுற்றிவளைப்பதற் குமான ஒரு கருவியாகவே பாவிக்கப்படும். இங்கு இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை வரைபு தீர்விற்கான ஒரு விவகார மாகக் கருதப்படவில்லை. அந்த நோக்கு நிலையில் விமர்சனங்களோ தீர்மானங்களோ முன்வைக்கப்படவில்லை. முன்வைக்கப் பட்டவையெல்லாம் - அவை சாதகமானதோ அன்றி பாதகமானதோ - எல்லாமே தேர்தல் நோக்கிலிருந்தே முன்வைக்கப்பட்டவை.

இந்த லட்சணத்தில் புலிகள் தங்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப் படையில் பேசுவது பற்றிய கடும் நிலைப் பாட்டை கொஞ்சம் நெகிழ்ந்து கொடுத்து விட்டால் காரியம் கைகூடிவிடும். அடைபட்ட சொர்க்கத்துக்கான பாதை திறபட்டுவிடும். என்று யாரும் கதையளந்தால் அது வெறும் அபத்தமாகிவிடாதா?

சமாதானத்தில் கரிசனை கொண்டி ருக்கும் சர்வதேச சமூகம் இந்தத் தேர்தல் சூட்சுமத்தைப் புரியாது புலிகள் தமது நிலைப் பாட்டில் கொஞ்சம் நெகிழ்ந்துகொடுப்பது சமா தானத்தை சாதகமாக்கப் பொருத்தமான வழி முறையென்று கருதுமேயானால் அதுவும் அபத்தமான புரிதலேயன்றி வேறென்ன.

விடுதலைப்புலிகள் சமாதானப் பய ணத்தில் பெருவெட்டான கொள்கைத் திட்ட த்தை முன்வைத்திருக்கிறார்கள். அது வலிமை யான யுத்தநிறுத்த ஒப்பந்தம், இராணுவ நெருக்கீடுகளிலிருந்து தளர்வு, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, அதன்மூலமான மீள் கட்டுமானம், இயல்புவாழ்வு, பகைமை நீங்கிய தீர்வுக்கான பரஸ்பர புரிந்துணர்வு, உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சி அலகு என்று அதன் நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. ஒஸ்லோ தீர்மானம் இதனை உட்கருவாகக் கொண்டிருக்கிறது.

சிறிலங்கா அரசின் பிரதிநிதியாக அப்போது அரசாங்கத்தில் இருந்த ஐ.தே.க இந்த ஒஸ்லோ தீர்மானத்தை புலிகளுடன் சேர்ந்து நிறைவேற்றியது. இலங்கை அரசி யலில் ஆட்சி மாறியபோதும் அரசின் தார்மீகப் பொறுப்பாக இதன்வழியில் முன்னேறுவதுதான் புதிய அரசாங்கத்தின் கடமையாக இருந் திருக்கவேண்டும். ஆனால் இன்றைய அரசியல் யதார்த்தம் அவ்வாறில்லை.

இலங்கையில் இருகட்சி யதார்த் தத்திலிருந்து இறுதித் தேர்தலில் ஜே.வி.பி யின் வளர்ச்சியோடு மூன்றாவது சக்தி உதய மாகிவிட்டது. ஜே.ஆர் இன் தேர்தல்முறை தந்த பரிசு இது. ஹெல உறுமயவின் வளர்ச்சி யும் இப்படியானதுதான். சிங்கள வாக்குகள் பல்முனையில் சிதறிவிட்டது. கூட்டரசாங்கமே அரசியல் யதார்த்தமாகிறது. அவர்களுக் கெல்லாம் செவிசாய்க்காமல் அரசியல் நடத்த இயலாது. இதனால் சில்லறைகளெல்லாம் பெரும் தலைவர்களாகிவிட்டார்கள்.

அதனால், அரசியலின் தீர்மான கரமான சக்தியாக பல கட்சிகள் இருக்கின்றன. சமாதான முயற்சி குறித்து அவை வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. ஒவ் வொரு கட்சிக்குள்ளும் சக்திவாய்ந்தவர்களாக பல்வேறு தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒருமித்த கருத்தில் இல்லை என்ப துடன், ஒவ்வொருவரும் பல நாக்குகளால் பேசுகிறார்கள். அவை ஜனாதிபதித் தேர்தல் என்ற நோக்கிலிருந்து எழுகின்றன. இவற்றுக் கெல்லாம் புலிகள் நெகிழ்ந்தும் புரழ்ந்தும் பதிலளிக்கவேண்டுமென எதிர்பார்ப்பது முட் டாள்த்தனம்.

சமாதானம் சமாதானத்திற்காக இன்று பேசப்படவில்லை. எனவேதான் சமாதானப் பயணத்தில் தமிழர் தரப்பிற்கு பாதுகாப்பு அவசியப்படுகிறது. இந்தப் பயணத்தை அச்சு றுத்தியிருப்பது சிங்கள ஆட்சியாளர்களின் இன்றைய அரசியல்தனம்தான். இந்த அச்சு றுத்தல்தான் இடைக்கால வரைபின் அவசி யத்தை வலியுறுத்துகிறது. நீர்த்துப்போகும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு மேலான வலிமை பொருந்திய பாதுகாப்பாக இடைக்கால தன் னாட்சி அதிகாரம் அவசியமாகிறது

மூன்று வருடகால யுத்தநிறுத்தம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படாத தேங்கிய நிலையில் அதன் அடித்தளமாக அமைந்திருக்கும் ஒப்பந்தம்கூட நீர்த்துப் போய்விடும் அபாயமுண்டு. ஒப்பந்தத்திற்கு இருக்கும் எல்லாவித வலிமைகளுக்கும் அப்பால் சமாதானத்தின் தேங்கிய காலநீட்சி வலிமையானதென்பதை யாரும் புறக்கணிக்க முடியாது. நடைமுறையில் அது தன் யதார்த் தத்தின் வலிமையை உணர்த்தாமலும் இல்லை.

ஒஸ்லோ தீர்மானத்தின்படி ஒரு இறுதித்தீர்வை எட்டும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் அரசிற்கு புலிகளின் தன் னாட்சி அதிகாரசபை அச்சுறுத்தல் அளிக்கிறது என்பது வேடிக்கையானது. மாறாக ஒஸ்லோ தீர்மானத்தை ஏற்று யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூன்று வருடத்தை எடுத்துக்கொண்ட பின்பும் பேச்சில் ஒரு வளர்ச்சி நிலையை அரசு தோற்றுவிக்க மறுக்கிறது என்பதுதான் தமிழர் களிற்கு அச்சுறுத்தலளிக்கிறது. தமிழர்களின் ஒப்பந்தகால வெறுப்பான அனுபவங்கள் இந்த அச்சுறுத்தலுக்கு மேலும் வலிமை சேர்க்கிறது. சமாதானப் பாதையில் வழமையாக வைக்கப் படும் சூழ்ச்சிப்பொறியை மீண்டும் நினைவுக் குக் கொண்டுவருகிறது.

**சமாதானம் சமாதானத்திற்காக இன்று பேசப்படவில்லை. எனவேதான் சமாதானப் பயணத்தில் தமிழர் தரப்பிற்கு பாதுகாப்பு அவசியப்படுகிறது. இந்தப் பயணத்தை அச்சுறுத்தியிருப்பது சிங்கள ஆட்சியாளர்களின் இன்றைய அரசியல் தனம்தான். இந்த அச்சுறுத்தல்தான் இடைக்கால வரைபின் அவசியத்தை வலியுறுத்துகிறது. நீர்த்துப்போகும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு மேலான வலிமை பொருந்திய பாதுகாப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகாரம் அவசியமாகிறது.**

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமையுமானால் அது சமாதானத்தின் வலிமைமிக்க இடைத்தளமாக அமையும். அத் தளம் யுத்தத்திற்குத் திரும்பவியலாத ஒரு தருணத்தையே தோற்றுவிக்கும். அத்தருணம் இருதரப்பிற்கும் பொதுமையானது. சமாதானத் திற்கு அதிக பாதுகாப்பைத் தருவது.

**— பிரபுத்திரன் —**

இதை விடுத்து ஜனாதிபதித் தேர்தல் வியூகத்துக்குள் சிறைப்படுத்தியிருக்கும் சமா தானத்தின் மீட்சிக்கு புலிகள் ஏதாவது செய்யக் கிடக்கிறது என்று யாராவது எண்ணினால் அது அரசியலில் விளப்பம்கெட்ட தனமே. கொழும் பின் தீர்மானங்கள் சமாதானத்திற்கான தீர் மானங்கள் என எண்ணுவதும் அதற்கெல்லாம் புலிகள் பொறுப்புடன் பதிலளிக்கவேண்டும் என எதிர்பார்ப்பதும் சில்லறைத்தனமே. சந்தைச் சூட்டைவைத்து தீர்மானம் எடுக்க போராட்டம் ஒன்றும் புடலங்காய் வியாபாரமல்லவே. ●



www.eelamview.com

# சிறிலங்கா நீதி நிர்வாகமும் நீதி மறுப்பும்

**ஒடுக்கப்பட்ட மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவேண்டும்.
அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும்.**

*- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*

சிறிலங்கா நீதி நிர்வாகத்தின் நவீன வரலாறு பிரிட்டிஷ் ஆட்சியாளரின் வருகையுடன் ஆரம்பிக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கிழக்கு இந்தியக் கொம்பனியின் ஆட்சி விலக்கப்பட்டு இலங்கை பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் முடிக்குரிய காலனித்துவ நாடாக நிர்வகிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆளுநரின்



அதிகாரத்திற்கு உட்பட்ட நீதி நிர்வாகம் சுயாதீனமாக இயங்குவதற்கு வகை செய்யப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் முதலாவது ஆளுநராகப் பதவி வகித்த பிறெடிறிக் நோர்த் (FREDE - RICK NORTH)தானே அதியுயர் நீதி அரசராகப் பதவி வகித்தார். காலனித்துவ ஆட்சி ஆரம்பித்தவுடன் நிறைவேற்று அதிகாரமும் நீதி நிர்வாகமும் வேறுபடுத்தப் பட்டன. இரு அலகுகளும் வேறு வேறாக இயங்கும்போது தனி மனிதர் சுதந்திரம் பேணப்படும் என்பது இன்று வரையிலான பிரிட்டிஷ் கோட்பாடாகும்.

நீதி நிர்வாகத்தின் தனித்தியங்கும் நிலவரம் பிரிட்டிஷ் ஆட்சி நிலவிய காலம் முழுவதும் காணப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்த பின் படிப்படியாக நீதி நிர்வாகத்தின் சுயாதீனம் ஆட்சியாளர்களால் பறித்தெடுக்கப்பட்டது. இன்று சிறிலங்கா நீதி நிர்வாகம் நிறைவேற்று அதிகார அலகின் கீழ் கட்டுப்பட்டு இயங்குகிறது. சட்டம் இயற்றுதல், நிறைவேற்றுதல், நீதி பரிபாலனம் என்ற முப்பரிமாணம் ஒரு அரசியல் சாசனத்தின் சிறப்பம்சமாகக் கருதப் படுகின்றது. உலகின் முதலாவது எழுத்து வடிவிலான அமெரிக்க அரசியல் சாசனத்தில் மூன்றும் நன்றாக வேறுபடுத்தப்பட்டு வரையறை செய்யப்பட்டுள்ளன. சிறிலங்காவின் 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் இதற்கு மாறானது. நிறைவேற்று அதிகாரத்தின் இருப்பிடமான ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டில் நீதி நிர்வாகத்தையும் வைத்திருக்கிறார். இது மிகப் பெரியதொரு ஜனநாயக வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

சிறிலங்காவின் நீதி நிர்வாகச் சீர்கேடு பற்றிய கண்டனக் குரல்கள் பலமாக ஒலிக்கின்றன. நீதி நிர்வாகத்தில் ஈடுபடும் நீதியாளர்கள் உட்பட சட்டத்

*சிறிலங்கா நீதிமன்றங்களில்*
*சிங்களவர்களுக்கு ஒருவகை நீதியும்*
*தமிழர்களுக்குப் பிறிதோர் வகை நீதியும்*
*வழங்கப்படுகிறது.*
*ந இன ஒதுக்கல் கொள்கையின் மாற்று வடிவமாகவும்,*
*பட்டமான மனித உரிமை மீறலாகவும் கருதப்படுகிறது.*

தரணிகள், கல்விமான்கள், ஐ.நா முகவரகங்கள், வேறு சர்வதேச அமைப்புக்கள் சிறிலங்கா நீதி நிர்வாகத்தைக் காலத்திற்குக் காலம் விமர்சித்துள்ளன. 1994 இல் ஐ.நாவின் மனித உரிமை ஆணையத்தால் நீதிபதிகளின் சுயாதீன இயக்கம், சட்டவாளர்களின் நடைமுறைகள் பற்றிய விசேட பார்வையாளராக (UN SPECIAL RAPPORTEUR ON THE INDEPENDENCE OF JUDGES AND LAWYERS) நியமிக்கப்பட்ட மலேசியா, சிங்கப்பூரின் மூத்த சட்டத்தரணி டத்தோ பரம் குமாரசாமி கொழும்பு வந்தார். அவ்வமயம் அவர் சிறிலங்கா அதியுயர் நீதிமன்ற அமர்வுகளைப் பார்வையிட்டார். அவர் பார்வையிட்ட ஒரு நீதி விசாரணையில் தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கை பிரதம நீதியரசர் சரத் சில்வா விசாரிப்பதைக் கண்ணுற்றார். எதிரியாகச் சுட்டப்

## கலாநிதி க.சோமாஸ்கந்தன்

பட்டவரே விசாரணையாளராக இருப்பதை அவர் வியப்புடன் நோக்கினார். “இக்காட்சி எனக்கு வியப்பையும் அதிர்ச்சியையும் தருகிறது” என்று குமாரசாமி பகிரங்கமாகக் கூறினார்.

வழக்கைத் தாக்கல் செய்த மைக்கேல் பர்நாந்து என்ற தொழிற்சங்கவாதி எதிரியாகக் குறிப்பிடப்பட்ட பிரதம நீதியரசர் சரத் சில்வா தான் தாக்கல் செய்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். இதற்குப் பதிலடியாக அவருக்கு நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் என்ற காரணம் காட்டி ஒருவருடக் கடும்காவல் தண்டனையை நீதியரசர் விதித்தார். அதன்பின் வழக்காளி மைக்கேல் பர்நாந்து சிறைச்சாலை அதிகாரிகளால் மூடிய வாகனமொன்றுக்குள் பலவந்தமாக ஏற்றப்பட்டார். நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்தே மூடிய வாகனத்தின் உட்புறத்தில் மைக்கேல் பர்நாந்து நையப் புடைக்கப் பட்டார். தாக்குதலுக்கு உள்ளான பர்நாந்து அதன்பின் சிறைச்சாலை அதிகாரிகளால் அரச மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அவரைப் பார்க்கச் சென்ற பரம் குமாரசாமிக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. நோயாளர் கட்டிலுடன் மைக்கேல் பர்நாந்து இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டிருந்தார். புகழ்பூத்த கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தினரை, “இப்படியான காட்டுமிராண்டித் தனங்கள் நீதியின் பெயரால் நடப்பதை நீங்கள் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்” என்று பரம் குமாரசாமி வினவியபோதும் பதில் கிடைக்கவில்லை.

நீதிமன்றங்களின் சுயாதீனமும் வெளியார் அழுத்தங்கள் இல்லாத இயக்கமும் 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்தபின் பறிபோயுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனத்தின் கீழ் சிறிலங்காவின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அதே சாசனத்தின்கீழ் பதவியேற்ற முதலாவது பிரதம நீதியரசர் நெவில் சமரக்கூனுக்கு பதவி சத்தியப்பிரமாணம் செய்து வைத்தார். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்பதோடு கீழ்நோக்கிச் செல்லும் சிறிலங்கா நிர்வாகம் பற்றிக் கட்டியம் கூறுவதாகவும் அமைகின்றது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் நெவில் சமரக்கூனும் மிகவும் நெருங்கிய நண்பர்கள், அத்தோடு இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நெடுநாள் உறுப்பினர்கள். இருப்பினும் பதவியேற்பு நடந்தபின் இருவருக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஆரம்பித்தன. ஜெயவர்த்தனாவின் உத்தரவுப்படி நடக்க சமரக்கூன் மறுத்தார். பிரிட்டிசார் காலத்து நீதியாளர்களின் வெளியார் தலையீடற்ற சுயாதீனம் பற்றிப் பேச அவர் தலைப்பட்டார். புதிய அரசியல் சாசனம் நீதிப்பிரிவின் சுயாதீனத்தை அனுமதிக்கவில்லை. இதை அறியாமலா அவர் பிரதம நீதியரசர் பதவியை ஏற்றார்? சாசனத்தை நன்கு அறிந்தவர் அதன்கீழ் பதவி ஏற்றது தான் மிகப்பெரிய தவறு என்பது வெளிப்படை.

தனது சர்வாதிகாரப் போக்கிற்கு தனது நண்பரும் சக அரசியல்வாதியுமான நெவில் சமரக்கூன் ஒத்துழைப்பு வழங்குவார் என்ற எதிர்பார்ப்புடன் அவரை ஜெயவர்த்தனா பதவியமர்த்தினார். அவருடைய எதிர்பாராத கடும் எதிர்ப்பு ஜெயவர்த்தனாவையும் அவருடைய சகாக்களையும் வெகுண்டெழச் செய்தது. கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் முன் பேச்சாளராகத் தோன்றிய அமைச்சர் லலித் அத்துலத் முதலி ‘இப்படியானதொரு மோதல்நிலை இனி மேலும் உருவாக அனுமதிக்கக் கூடாது’ என்று பேசினார். அதன்



**சிறிலங்காவின் உயர் நீதிமன்றக் கட்டடம்**

பின் நீதி அரசர்கள் தெரிவில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மிகக் கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். இன்றைய பிரதம நீதியரசர் மீது பலதரப்பட்ட முறைகேட்டுக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் அவருடைய ஜனாதிபதி விசுவாசமும் கீழ்ப்படிவும் அவருடைய பதவியைத் தக்கவைத்துள்ளன. இத் தங்கு தடையற்ற ஒத்துழைப்பு சிறிலங்காவில் நிறைவேற்று அதிகாரச் சர்வாதிகாரத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது. கட்டுப்பாடற்ற ஜனநாயகம் ஆபத்தானது என்று முன்பு நம்பிய நெவில் சமரக்கூன் பிற்காலத்தில் கட்டுப்பாடற்ற நிறைவேற்று அதிகாரம்தான் எதிலும் பார்க்க மோசமானது என்பதை உணர்ந்தார்.

1978ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த சிறிலங்கா அரசியல் சாசனம் தனியொரு மனிதனின் உயர்வுக்காக உருவாக்கப் பட்டது. அதன் உருவாக்க காலத்தில் பிரெஞ்சு நாட்டின் அரசியல் சாசனத்தை அடியொற்றிப் பிறந்ததாக அது சாசனவியல் நிபுணர்களால் போற்றப்பட்டது. டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றவர்கள் மாத்திரம் உண்மையை உணர்ந்தனர். இவர் நெவில் சமரக்கூனின் நண்பர், ஜெயவர்த்தனாவுடன் மோதல் நிலை வலுப்பெற்றபின் அவருக்கு ஆலோசனை வழங்கியவர். கொல்வின் ஆர்.டி. சில்வாவின் கருத்துப்படி மத்திய ஆபிரிக்கக் குடியரசின் சர்வாதிகாரி ஜீன் பெடல் பொக்காசாவின் அரசியல் சாசனத்தை ஒத்ததாக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் சாசனம் இருந்தது. 1976ஆம் ஆண்டு தன்னைச் சக்கரவர்த்தியாகப் பிரகடனப்படுத்திய பொக்காசா கொடுங்கோல் ஆட்சிக்கு உதாரணமாக விளங்கியவர். 1979இல் பொறுமையின் எல்லைக்குச் சென்ற மக்களால் நாட்டைவிட்டு பொக்காசா துரத்தப்பட்டார். ஆனால் சிறிலங்காவின் அரசியல் சாசனத்தை மாற்றவும் முடியவில்லை ஜனாதிபதி பதவி வகிப்பவரைத் துரத்தவும் முடியவில்லை.

“ஒரு மொழி இரு நாடு, இருமொழி ஒருநாடு” என்று 1956இல் தனிச் சிங்களச் சட்ட விவாதத்தின்போது தத்துவம் பேசிய கொல்வின் ஆர்.டி.சில்வாவும் இலேசுப்பட்டவரல்ல. அவர் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் இணைந்து சிறிலங்காவைக் குடியரசாக்கிய 1971ஆம் ஆண்டின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய வீரராவர். சோல்பரி பிரபு இலங்கைக்கு வழங்கிய அரசியல் யாப்பில் காணப்பட்ட சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் சரத்துக்களை இவர் ஒழித்துக் கட்டினார். இங்கிலாந்தின் பிறிவி கவுன்சில் மேன்முறையீட்டு


www.eelamview.com

மன்றத்திற்கு மனுச்செய்யும் உரித்தையும் அரசியல் சாசனத்தின் மூலம் அகற்றினார். எல்லாவற்றிற்கும் மேலாக தனது யாப்பின் மூலம் சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் முதலிடம் வழங்கினார். இதன்மூலம் பதினைந்து வருடங்களுக்கு முன்பு உதிர்த்த தத்துவ முத்துக்களை அவர் காற்றில் பறக்கவிட்டார்.

1971, 1978ஆம் ஆண்டுகளின் அரசியல் சாசனங்களுக்கு முன்பே இலங்கை நீதி நிர்வாகத் துறையில் இனத்துவேஷ விஷவித்துக்கள் முளைவிட்டுள்ளன. சிங்கள ஆட்சியாளர்களின் ஆப்த நண்பனாகவும் ஆலோசகராகவும் ஒருகாலத்தில் திகழ்ந்த வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம் இறுதிக் காலத்தில் தனது பேரப்பிள்ளைகளுக்கு 'ஈழப்போராட்டம்' என்ற கடிதத் தொகுப்பை எழுதினார். சுந்தரலிங்கத்தின் மூத்த சகோதரரான நாகலிங்கத்திற்கு நிரந்தர பிரதம நீதியரசர் பதவி வழங்கப்படாததற்கு அவர் தமிழராகப் பிறந்ததே காரணம் என்று அதில் விளக்கம் கூறுகிறார். 1955இல் நாகலிங்கம் ஆளுநர் நாயகமாகப் (GOVERNOR - GENERAL) பதவி வகிக்கும் வாய்ப்புப் பெற்றபோது அவருக்கு அது தற்காலிகமாக மாத்திரம் வழங்கப்பட்டது. நீதியரசர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் கொழும்பு சைவ மங்கையர் கழகத்தின் முன் தோன்றி பின்வருமாறு அவர் பேசினார். "சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக வாழ முடியாத கட்டம் வந்துவிட்டது. பாதை விலகவேண்டிய கட்டமாகிவிட்டது. சட்டத்துறை மொழியில் இதைச் சட்ட அங்கீகாரம் பெற்ற மணமுறிவு எனலாம்" நாகலிங்கத்தின் இப்பேச்சு 1956இல் நடைபெற்றது.


**தமிழர்களுக்கு நீதி மறுக்கும் நோக்கில் சிறிலங்கா நீதி நிர்வாகமும் சட்டமா அதிபர் திணைக்களமும் கூட்டாக இழுத்தடிப்பு உபாயத்தைக் கையாள்கின்றன. காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்பது மேற்கு நாடுகளின் கோட்பாடு - JUSTICE DELAYED IS JUSTICE DENIED**

சிறிலங்காவின் நீதி நிர்வாகத்தின் மீதும் அரசு தரப்பில் வழங்குத் தாக்கல் செய்யும் பிரிவான சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீதும் ஈழத் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து ஏறத்தாழ அரை நூற்றாண்டாகின்றது. நிறைவேற்று அதிகார அரசு முறை வந்தபின் நீதி நிர்வாகம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக நீதி நிர்வாகம் தனது நம்பகத் தன்மையையும் நடுநிலையையும் இழந்த நிலையில் இன்று இயங்குகின்றது. தமிழ்மக்களுக்கு எதிராகச் சிங்கள ஆயுதப் படைகளும் பொலிசாரும் மேற்கொள்ளும் அத்துமீறல்களுக்கு நீதி நிர்வாகம் துணைபோகிறது. தமிழ் மக்களுக்கு நேர்மையான, நீதியான சேவை வழங்கும் நிலையில் சிறிலங்கா நீதி நிர்வாகம் இன்று இல்லை. தமிழர்களுக்காகத் தமிழர்களால் நடத்தப்படும் நீதிச் சேவையின் தேவையை இது உணர்த்துகிறது. சிறிலங்கா நீதி மன்றங்களில் சிங்களவர்களுக்கு ஒருவகை நீதியும் தமிழர்களுக்குப் பிறிதோர்வகை நீதியும் வழங்கப்படுகிறது. இது இன ஒதுக்கல் கொள்கையின் மாற்று வடிவமாகவும், அப்பட்டமான மனித உரிமை மீறலாகவும் கருதப்படுகிறது.

தமிழர்களுக்கு நீதி மறுக்கும் நோக்கில் சிறிலங்கா நீதி நிர்வாகமும் சட்டமா அதிபர் திணைக்களமும் கூட்டாக இழுத்தடிப்பு உபாயத்தைக் கையாள்கின்றன. காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்பது மேற்கு நாடுகளின் கோட்பாடு -JUSTICE DELAYED IS JUSTICE DENIED பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை நடந்து ஆறு வருடம் கடந்த நிலையில் இன்னும் பொலிஸ் விசாரணைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த இரவு நேரத்தில், இராணுவத் தடை முகாம் அருகில் நடந்த இப்படுகொலை சம்பந்தமான விசாரணைகள் குற்றவாளிகளை மறைப்பதற்காகவே இழுத்தடிக்கப்படுகின்றன. பொலிஸ் விசாரணைகள் தொடர்பாகக் கொலை நடந்த யாழ்.நகரின் சிறிலங்கா நீதி நிர்வாகத்தில் பணியாற்றும் தமிழ் நீதியாளர்கள் விடுக்கும் உத்தரவுகளை சிங்களப் பொலிசார் கணக்கில் எடுப்பதில்லை. தமிழர்கள் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் சிறிது காலத்தில் காணாமற் போவதும் சிறிலங்காவில் நடக்கும் நாளாந்திர நிகழ்ச்சிகளாகும்.

கடந்த சில வருடங்களாகச் சிறிலங்கா நீதி நிர்வாகத்தில் பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வுத் துறையினரின் தலையீடு பெருகியுள்ளது. ஜூன் 06, 2004ஆம் நாள் மட்டு - பொலநறுவை எல்லையில் அமைந்துள்ள ஹிங்குராகொட பௌத்த விகாரை ஒன்றினுள் மறைந்திருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அப்போது இவர்களிடமிருந்த ரி56 ரகத் துப்பாக்கிகள், ரி81 ரகத் துப்பாக்கிகள், ரி81 ரக விசேட சுடுகலன்கள் கைப்பற்றப்பட்டன. இவர்கள் நீதியாளர் முன் நிறுத்தப்பட்டபோது அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை என்று பொலிசார் சாதித்தனர். இறுதியில் இவர்கள் யாவரும் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். புலனாய்வுத் துறையினரின் தலையீடு காரணமாக இவர்கள் விடுதலை பெற்றதாக நம்பப்படுகிறது.

இலண்டன் மாநகரில் இயங்கும் தடுத்துவைக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவும் அமைப்பு (THE TAMIL DETHINEES SUPPORT GROUP) என்ற நிறுவனம் வெளியிட்ட 'எம்மை விடுதலை செய்யுங்கள் அல்லது வழக்குத் தாக்குதல் செய்யுங்கள்' என்ற நீண்ட அறிக்கைப்படி 2000 வரையிலான தமிழ் ஆண், பெண், சிறுவர்கள், குழந்தைகள் வெலிக்கடை, களுத்துறைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது யாதொரு குற்றமும் சுமத்தப்படவில்லை. பல தமிழர்கள் பொலிஸ் மற்றும் இராணுவத்தால் நிர்வகிக்கப்படும் இரகசிய தடுப்பு முகாம்களில் பல வருடங்களாக வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 25வருடங்கள் சென்றுவிட்டன. இச்சட்டத்தின் 7(2) சரத்தின்கீழ் மேல் நீதிமன்ற விசாரணை முடியும்வரை ஒருவரைக் காலவரையின்றி ஒரு, மஜிஸ்திரேற் தர நீதியாளரின் உத்தரவுப்படி தடுத்துவைக்க முடியும். இதைப் பயன்படுத்தி தமிழர்களை வகை தொகையாக சிறிலங்கா நீதிமன்றங்கள் அடைத்து வைத்திருக்கின்றன. இப்போதைய சட்டமா அதிபர் ஒரு தமிழர், "ஒவ்வொரு கைதியின் கோப்புக்களையும் நான் தனித்தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதன்பின்பே விடுதலையா வழக்கா என்பதை நான் தீர்மானிப்பேன்." என்று கடந்த சில வருடமாக அவர் கூறுகிறார்.



தமிழர் பகுதிகளில் படுகொலைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் சிங்களப் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் எதிராக அத்தி பூத்தாற் போல் சில சமயங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதுண்டு. அப்போதெல்லாம் தமது வழக்கை சிங்களப்பகுதி நீதி மன்றிற்கு மாற்றும்படி இக் குற்றவாளிகள் தவறாமல் மனுச் செய்வார்கள். தமக்கு பாதுகாப்பு இல்லை, தமிழர் பகுதியில் தமக்கு உயிராபத்து இருப்பதாகத் தமது மனுவில் இவர்கள் குறிப்பிடுவார்கள். சிறிலங்காவின் மேல் முறையீட்டு நீதிமன்றம் இதை ஏற்றுக்கொள்வது வழமை. அதாவது பாதிக்கப்பட்டவரிலும் பார்க்க குற்றவாளியின் பாதுகாப்பில் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கூடுதல் அக்கறை. சென்றவருடம் யாழ்.நகரப் பகுதியில் ஈழநாதம் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்த சிறுவன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கொலைமுயற்சி வழக்கை யாழ். நீதிமன்றத்திலிருந்து சிங்களப் பகுதிக்கு மாற்றும் முயற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. 18 வயதுக்கும் குறைந்த சூடு வாங்கிய சிறுவனை துன்புறுத்துவதற்கு வசதியாக மாற்றம் கோரப்படுகிறது. யாழ் நீதிமன்ற விசாரணைகளை இடைநிறுத்தும் மாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறிலங்காவின் சுப்பிறீம் கோட் எனப்படும் அதியுயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நீதிமன்றத் தீர்ப்பு கிறிஸ்தவ மதத்தினரையும் பிற சிறுபான்மை மதத்தினரையும் அச்சம்கொள்ள வைத்துள்ளது. 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு 9ஆம் சரத்து பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதோடு, பௌத்த மதத்தின் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவேண்டிய பொறுப்பையும் அரசுமீது சுமத்துகின்றது. புனித பிரான்சிஸ் கன்னியாஸ்திரி மடங்களை ஒன்றிணைத்து சட்ட வலுவுள்ளதாக்கும் முயற்சிக்கு அனுலா ஜராங்கனி பெர்நாந்து என்பவர் சுப்பிறீம் கோட்டில் எதிர் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவில் அவர் நம்பமுடியாததொரு வாதத்தை முன்வைத்தார், அதாவது புனித பிரான்சிஸ் கன்னியாஸ்திரி மடங்களின் ஒன்றிணைப்பு "புத்த சாசனத்தின் இருப்பைப் பலவீனப்படுத்தி விடும்" இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டு சிறிலங்கா அதியுயர் நீதிமன்றம் ஒன்றிணைப்பிற்குத் தடை விதித்தது. மிகவும் பிற்போக்கான சிங்கள பௌத்த சிந்தனையால் பீடிக்கப்பட்ட நீதி நிறுவனமாக சிறிலங்காவின் அதியுயர் நீதிமன்றத்தைப் பார்ப்பதில் தவறில்லை. இந்துத்துவப் பெரும்பான்மையினரால் சிறுபான்மை முஸ்லிம்கள் குஜராத்தில் படுகொலை செய்யப்பட்ட பின் அவர்களுக்கு பொலிஸ் மற்றும் நீதிமன்றப் பாதுகாப்பு மறுக்கப்பட்டபோது, இந்திய உயர் நீதிமன்றம் முஸ்லிம்கள் சார்பில் தலையிட்டது. தெற்கு ஆசிய விவகாரங்களில் இத் தலையீடு ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. ஆனால் சிறிலங்காவின் அதியுயர் நீதிமன்றம் பெரும்பான்மை இனத்தவரின் குரலாகவும் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கும் நிறுவனமாகவும் இடம்பெறுகிறது.

சிறிலங்கா நீதி நிர்வாகத்தை சிங்கள மக்களும் விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். இவ்வருடம் ஜூலை மாதம் கண்டி அக்குறணை பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நடந்த அரச அதிகாரிகளுக்கான கருத்தரங்கில் பேசும்போது இலஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கே.ஏ.சந்திர ரத்தினா 'இலங்கையில் இலஞ்சம் பெறுவதில் பொலிஸ் திணைக்களம், சுகாதார சேவைகள், நீதி நிர்வாகம் என்பன முன்னிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். தனி மனிதர்களின் தவறுகளால் சிறிலங்கா நீதி நிர்வாகம் பீடிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவதைவிட முழுக் கட்டமைப்பும் சீரழிந்துவிட்டதாகக் கூறுவதே மிகப் பொருத்தம். சுயாட்சியின் சின்னமாக விளங்கும் தமிழீழ நீதிமன்றங்களில் இக் குறைபாட்டைக் காணமுடியாது. சிறிலங்கா நீதி நிர்வாக வீழ்ச்சிக்கு 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு காரணமாகிறது. தமிழீழ மக்கள் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் 10ஆம் சரத்தில் நீதியாளர்களின் சுயாதீனம் விசேடமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. நீதித்துறையைப் பொறுத்தளவில் இதை மேற்கூறிய யோசனைகளின் அதிமுக்கியமான அம்சமாகக் கருதலாம்.



சரத் சில்வா

## — வீரமுனைப் படுகொலை —

கிழக்கு மாகாணத்தின் தென் கோடியில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருந்த வீரமுனை எனும் அழகிய தமிழ்க் கிராமத்துக்கு காலடி எடுத்து வைத்தபோது அங்கு கடந்தகால இன அழிப்பின் வடுக்கள் நன்றாகப் புலப்பட்டது.

> "இன்னும், 1990 ஆவணி, 11ஆம் திகதி சவளக்கடை இராணுவ முகாமருகாகச் சென்றபோது பிடித்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட 40பேர், 12ஆம் திகதி கொண்டவெட்டுவான் முகாமிலிருந்துவந்த இராணுவத்தினரால் வீரமுனைக் கிராமத்தினுள் வைத்துக் கொல்லப்பட்ட 40பேர், அன்றைய சம்பவத்தில் காயமடைந்து அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை வைத்தியசாலையினுள்ளேயே பிடிக்கப்பட்டு, கொண்டவெட்டுவான் முகாமருகில் கொண்டுசெல்லப்பட்டு கொல்லப்பட்டு எரிக்கப்பட்டவர்கள் என வீரமுனைக் கிராமம் நூற்றுக்கணக்கில் தன் எல்லா உறவுகளையும் இழந்தே போனது."

1960ஆம் ஆண்டுமுதல் 1991ஆம் ஆண்டுவரை சிங்கள இராணுவத்தினராலும் சில முஸ்லிம் கும்பல்களாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு இக்கிராமம் உள்ளாக்கப்பட்டிருந்தது. வாள் வெட்டுக்கும், கத்திக் குத்துக்கும், துப்பாக்கி வேட்டுக்கும் மத்தியில் வளத்தாப்பிட்டி, வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை போன்ற கிராம மக்கள் நாளாந்தம் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் வளங்கொழிக்கும் சில தமிழ்க் கிராமங்களை பார்த்துப் பார்த்து சகிக்கமுடியாத பேரினவாத அரசு எப்படியாவது இக் கிராமங்களை அருகிருக்கும் சிங்களக் கிராமங்களோடு இணைத்துவிட வேண்டுமென பல திட்டங்களைத் தீட்டி அரச கூலிப் படைகளையும் சில முஸ்லிம் கும்பல்களையும் ஏவிவிட்டனர்.

1960ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தே இக்கிராமத்தில் இனவாதிகளின் நிழல் படரத்தொடங்கியது. அன்றிலிருந்தே மக்கள் தப்பியோடுவதும் திரும்பி வருவதுமாய் தினமும் துன்பத்தைச் சுமந்துவந்தனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள கொண்டவெட்டுவான் முகாமிலிருந்த இராணுவத்தினரையும், அயல் கிராமங்களைச்சூழ இருந்த சில முஸ்லிம் காடையர்களையும் பயன்படுத்தி வீரமுனைக் கிராமமக்களை கொன்று இவ் வளங்கொழிக்கும் கிராமத்தினை சிங்களக் கிராமங்களுடன் இணைத்துவிடவேண்டும் என்று அப்போதைய ஆட்சியில் இருந்த பேரினவாத அரசு திட்டம் ஒன்றைத் தீட்டி அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

**நிர்மலன்**

1990ஆம் ஆண்டு, ஆனிமாதம் 20ஆம் திகதியே இந்த மக்களுக்கு இக் கிராமத்தில் வாழும் இறுதி நாளாக இருக்க வேண்டும் என்று சிங்களத்தால் நாள் குறிக்கப்பட்டது. அன்று அதிகாலை 5.30 மணியளவில் வீரமுனை, வீரச்சோலை, வளத்தாப்பிட்டி போன்ற தமிழ்க் கிராமங்களைச் சுற்றி இடையிடையே வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மக்கள் ஏதோ ஆபத்து நடக்கப் போகின்றது என்று உணர்ந்துகொண்டனர். கொண்டவெட்டுவான் இராணுவமுகாம் இராணுவத்தினராலும், அயல் கிராமங்களைச் சேர்ந்த சில முஸ்லிம் காடையர்களாலும் இக்கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டிருந்தன. அக்கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறாதவாறு இடையிடையே இராணுவத்தினரால் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டவண்ணமிருந்தன.

நேரம், காலை 7.00 மணி. திடீரென கிராமத்தினுள் சிங்கள இராணுவத்தினரும், முஸ்லிம் காடையர்களும் புகுந்தனர். வீடு வீடாகச் சென்று மக்கள் அனைவரையும் கோயிலுக்குள் செல்லுமாறு விரட்டினர். வீடுகளில் தனிமையில் இருந்தால் ஏதாவது நடந்துவிடும் என்ற அச்சத்தில் மக்கள் அனைவரும் நான் முந்தி நீ முந்தி என வீரமுனை பிள்ளையார் ஆலயத்தை நோக்கி பீதியுடன் விரைந்தனர். அம்மக்களிலிருந்து சுமார் 60 பேர் வரையான ஆண்களை படையினர் தெரிவு செய்தார்கள். இவர்களைக் கைதுசெய்து விசாரணை செய்வதற்காக என அழைத்துச் சென்றனர்.



# சிதைக்கப்பட்டதொரு ஊரின் வாழ்வு



அவர்களைக் கொண்டுசென்று சிறிது நேரத்தின் பின் சம்மாந்துறைக் காட்டுக்குள் தீ பற்றி எரிந்தது. கரும்புகையுடன் எழும்பிய தீயினைக் கண்ட கிராம மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு கதறி அழுதனர். அந்த 60 அப்பாவி உயிர்களையும் உயிரோடு எரியும் நெருப்பிலே எறிந்தார்கள். ஓடியவர்கள் துப்பாக்கியால் சுட்டு நெருப்பில் தூக்கி வீசப்பட்டார்கள். இந்நடவடிக்கையில் சில முஸ்லிம் காடையரும் மிக மும்முரமாக நின்றார்கள்.

அந்த 60 உயிர்களையும் பொசுக்கியும் இராணுவத்தினரின் கொலைப்பசி ஆறவில்லை. ஒரு வாரம்கூட ஆகவில்லை. மீண்டும் வீரமுனைக் கிராமத்திற்குள் நுழைந்த 58 அப்பாவிப் பொதுமக்களை கைதுசெய்த கொண்டவெட்டுவான் கிராமத்திற்கு அருகில் அவர்களை அவ்வாறே சுட்டுக்கொன்று தீயிலிட்டு எரித்தார்கள். இனியும் இக்கிராமத்தில் இருந்தால் இனவெறியர்கள் அனைவரையும் வேட்டையாடி விடுவார்கள் எனப் பயந்த கிராம மக்கள் கையில் எடுத்த பொருட்களோடு காரைதீவுக் கிராமத்தை நோக்கி தப்பியோடினார்கள்.

காரைதீவுக் கிராமத்திற்குள் நுழைந்த மக்களுக்கு, பாடசாலை அகதிமுகாமாக மாறியது. ஆனால் அந்த அகதிமுகாம் வெறியர்களின் கொலைமுகாமாக மாறுமென அவர்கள் சிறிதளவுகூட நினைக்கவில்லை.

கிராமத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொலைசெய்யப்பட்டு ஒருமாதம் கூட ஆகவில்லை. ஆடிமாதம் 4ஆம் திகதி காரைதீவு அகதி முகாம், காரைதீவு விசேட அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. அங்கிருந்த 15 ஆண்கள் கைதுசெய்து இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட மறுநாள் உறவுகள் அவர்களைத்தேடி காரைதீவு அதிரடிப்படை முகாமுக்குச் சென்றவேளை "நாங்கள் அப்படி ஒருத்தரையும் நேற்றுக் கைது செய்யவில்லை. நீங்கள் வேறு எங்காவது போய் பாருங்கள், இங்கு நிற்கவேண்டாம். நின்றால் சுட்டுவிடுவோம்" என அதிரடிப் படையினர் அம்மக்களிடம் அச்சுறுத்தி விரட்டியடித்தனர். அழுது புலம்பிய மக்கள் அகதிமுகாம் திரும்பினர். மீண்டும் 10ஆம் திகதி அகதிமுகாமுக்குள் நுழைந்த அதிரடிப் படையினர் 13 ஆண்களைப் பிடித்தார்கள். அப்போது உறவுகள் கதறி அழுது "ஐயா, முதலும் எங்கட பிள்ளைகள கொண்டுபோனீங்க. இன்னும் அவங்க முடிவு என்னனெண்டு தெரியாது. இவர்களையும் அப்பிடி கொண்டுபோகாம விட்டுடுங்கள், நாங்கள் அகதிகளாய் வந்திருக்கிறோம் ஐயா" என மண்டாடினர். அவர்களின் மன்றாட்டங்களுக்கும் கதறல்களுக்கும் துப்பாக்கிகள்தான் பதில் கூறின. அவ்விடத்தில் வைத்தே அம்முகாமிலிருந்த மக்கள் தலையிலும், முதுகிலும் தாறுமாறாய் தாக்கப்பட்டனர்.

இறுதியில் அன்றைய பொழுதில் கைது செய்யப்பட்டவர்களுடன், முதலில் கைது செய்யப்பட்டவர்களுமாக மொத்தமாக 28பேரும் காரைதீவு விசேட அதிரடிப்படையினரால் சித்திரவதை செய்து சாகடிக்கப்பட்டனர். அதேமாதம் 26ஆம் திகதி கொண்டவெட்டுவான் முகாமிலிருந்து வந்த படையினர் மல்வத்தை, வீரமுனைக் கிராமங்களைச் சேர்ந்த 10 பேரைக் கைதுசெய்து சென்றனர். அவர்களின் முடிவு இன்றுவரை என்னவென்றே தெரியவில்லை.

வீரமுனையில், ஆனிமாதம் ஆரம்பித்த இன அழிப்பு நடவடிக்கை ஆவணி மாதத்தில் உச்சக்கட்டத்தை தாண்டியிருந்தது. ஆவணிமாதம் 08ஆம் திகதி சிங்களப் படையினருடன் இணைந்து சிங்கள ஊர்காவல் படையினரும் அயல் கிராமங்களைச் சேர்ந்த சில முஸ்லிம் காடையரும் பிற்பகல் 4.00 மணியளவில் திடீரென கிராமத்திற்குள் நுழைந்தனர். கண்களில்பட்ட 10 பேர்வரை பிடிக்கப்பட்டு, பிடித்த இடத்திலேயே கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இன்னும், 1990, ஆவணி 11ஆம் திகதி சவளக்கடை இராணுவ முகாமருகாகச் சென்றபோது பிடித்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட 40பேர், 12ஆம் திகதி கொண்டவெட்டுவான் முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரால் வீரமுனைக் கிராமத்தினுள் வைத்து கொல்லப்பட்ட 40பேர், அன்றைய சம்பவத்தில் காயமடைந்து அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருந்தவேளை வைத்தியசலையினுள்ளேயே பிடிக்கப்பட்டு, கொண்டவெட்டுவான் முகாமருகில் கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டு எரிக்கப்பட்டவர்கள் என வீரமுனைக் கிராமம் நூற்றுக்கணக்கில் தன் எல்லா உறவுகளையும் இழந்தே போனது.

தென்தமிழீழத்தின் எல்லாப் படுகொலைகளையும் போலவே நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதங்களாக நடந்த வீரமுனைப் படுகொலைக்கு இன்றுவரை எந்த நியாயமும் கிடைக்காமலேயே போனது. எஞ்சியது இன்றும் அச்சத்துடன், தம் ஊரிலிருந்து பெருமளவில் விரட்டப்பட்டும் அவலவாழ்வு வாழும் வீரமுனை மக்களின் நியாயத்திற்கான பெருங்குரல் மாத்திரமே. ●

# கைகொடுத்த கட்டுமரம்

முகாமுக்கு வந்து சேர்ந்தபோது நள்ளிரவாகியிருந்தது. முகம் கழுவுவதற்கு கிணற்றடிக்குச் சென்றான். கண்களில் தண்ணீர் பட்டதும் கண்கள் எரிந்தன. முகத்தைத் துடைத்துவிட்டு அன்றைய நாட்குறிப்பை எழுதினான். உடல் அடித்துப் போட்டதுபோல அலுப்பாக இருந்தது. படுக்கைக்குப் போனபோதும் அவனுக்கு நித்திரை வரவில்லை.

விழுப்புண்ணடைந்து, பரலைஸான போராளிகளின் முகாமுக்குப் போயிருந்தான். முடிந்தவரை அவர்களுக்கான உணவுப்பொருள் வழங்கலில் கவனமெடுத்தபோதும் சில நாட்களாக கறிக்கு மீன் வழங்கமுடியவில்லை.

கடற்படையின் தொடர்ச்சியான தாக்குதல்களோடு காலநிலையும் பாதகமாக இருந்ததால் சில நாட்களாக மீனவர்கள் கடலுக்குப் போவது அரிதாகிப் போயிற்று. கடலுக்குப்போன மீனவர்களுக்கும் கறிக்குக்கூட மீனில்லாத நிலையானது.

நாளைக்கு எப்படியும் அவர்களுக்கு மீன் வழங்கவேண்டுமென்ற முடிவோடு உறங்கிப்போனான். மணிக்கூட்டின் அலாரம் அடித்தபோது விழித்துக் கொண்டான். அதிகாலை ஐந்து மணியாகியிருந்தது. கடற்கரைக்குப் புறப்பட்டான். கடற்கரையை அடைந்தபோது கடலுக்குப் போயிருந்த பெரும்பாலான கட்டுமரங்கள் கரைக்கு வந்திருந்தன. மீனெதுவும் படவில்லை. மீனவர்கள் சோகமே உருவாக வழிபலகையை தோளில் வைத்தபடி வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.



இன்னுமொரு கட்டுமரம் மட்டும் கடலில் தெரிந்தது. அவன் அதனை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

சின்ன வயதிலிருந்தே கடற்கரையென்றால் அவனுக்கு நன்றாகப் பிடிக்கும். பள்ளிக்கூடத்தில் கட்டுரை எழுதச்சொன்னால் அவன் எடுக்கும் தலைப்பு கடற்கரைக் காட்சிதான்.

ஆனால் இப்போது கடற்கோலங்களை அவனால் இரசிக்க முடியவில்லை. வேதனைப் பெருமூச்சு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. கடந்தகால கடல்விழா நினைவுகளும் இடையிடையே வந்துபோயின.

தூரத்தே உடைந்த கட்டுமரங்களும் சிதைந்த குடிசைகளும் தெரிந்தன. விறகுத் தடிகளாய் மெலிந்த உருவங்கள் அசைந்துகொண்டிருந்தன. அவற்றைத் தொடர்ந்து பார்க்க மனமற்றவனாய் கடலில் தெரிந்த கட்டுமரத்தைப் பார்த்தான்.

கட்டுமரத்தைத் தாண்டி கடற்புலிகளின் படகொன்று விரைந்துகொண்டிருந்தது. கட்டுமரம் கரைக்கு திரும்பிக்கொண்டிருந்தது. காகங்கள் சில கட்டுமரத்தை கண்வைத்துப் பறந்து அமர்ந்தன. அவனுக்குள் சற்று நம்பிக்கை துளிர்த்தது.

சிறிதளவு மீன் பட்டிருந்தது. அவ்வளவு மீனையும் வாங்கினால்த்தான் அந்த முகாமுக்கு கொடுக்கலாம். அது சாத்தியப்படாது என நினைத்தவன் சோர்வோடு திரும்பி நடந்தான்.

கட்டுமரக்காறர் கூப்பிட்ட குரல் கேட்டு கட்டுமரத்தடிக்கு வந்தான். இருந்த மீன் எல்லாவற்றையும் அவர் அவனிடம் தந்தார்.

“அப்ப உங்களுக்கு கறிக்கு?” – அவன் அவரைப்பார்த்துக் கேட்டான்.

“நாங்கள் நெடுக சாப்பிடுறனாங்கள்தானே. இண்டைக்கு மரக்கறியைச் சமைப்பம்”

அவர் புன்னகையோடு சொன்னார். அவன் மீனுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு விடைபெற்றான். கடற்கரை மணலில் சிறிய நண்டுகள் கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருந்தன. •

**ஆ.ந. பொற்கோ**

பதிரப்படாத பக்கங்கள்

---

**(06ஆம் பக்கத் தொடர்ச்சி)**

*வழிநடத்தும் பொறுப்பினை எடுத்து சில வாரங்களின் பின், ஒருநாள் அவரிடம் ‘வேண்டிக் கட்டிக்கொண்டு’ இப்படித்தான் என்னிடம் கூறினான்.*

*“ஒவ்வொரு போராளியும் பொறுப்பாளராய் வருமுன் சில மாதங்களேனும் - அவருக்குப் பக்கத்தில நிற்கவேணும் - அப்பதான் அவருடைய எதிர்பார்க்கையை விளங்கிக்கொண்டு பெடியளையும் வழிநடத்துவினம், தங்களையும் வழிநடத்துவினம்.”*

*அவனின்ர வாகன ஓட்டத்தைப் பற்றியும் சொல்லத்தான் வேண்டும். வாகனம் வலம், இடம் என சின்ன ஆட்டத்தோட வேகமாய் வருகுதெண்டால் அவன்தான் ஓடிவாறான் என்று ஊகிக்கிறது அவ்வளவு சிரமமான விடயமல்ல.*

*“மாட்டின்ர நாணயத்தைப் பிடித்த கை ‘ஸ்ரேறிங்’ஐப் (STEERING) பிடித்தால், இப்படித்தான் வாகனம் ஆடி ஆடி வரும்” எண்டு லெப்.கேணல் கோபி கிண்டலடித்தால் “ப்பூ... இதை இன்னொருத்தர் சொன்னால் கேட்கலாம்” என மறுத்தான் போட்டு விடுவான்.*

*ஒரு சமயம் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் அவனது கிராமப் பக்கம் வந்தவேளை அவனது வீட்டில்தான் மதியச் சாப்பாடு.*

*இந்தச் செய்தியை அவனது காதில் நான்தான் போட்டது.*

*“அம்மா நல்லாச் சமைச்சவவே, உறைப்பை சற்று கூடுதலாய்ப் போட்டிப்பாவே, சோறு என்ன அடிப்பிடிக்காமல் இருந்திச்சோ?” அவனது ஆதங்கம் எனக்கும் புரிய அதிகநேரம் எடுக்கவில்லை.*

*உண்மையில என் வாழ்நாளில் அவனது அம்மாவின் கைபட்ட சமையலைவிட உருசையான சாப்பாட்டை இன்னும் கண்டதில்லை. எண்டாலும் “சமையல் அவ்வளவு வாய்ப்பில்லைத்தான்” என்ற பொய்யை வேண்டுமென்றே அவனுக்குச் சொன்னேன்.*

*“நீ இயக்கத்துக்குப் போய்த்தான் சமையல் படிச்சனி. நீ பிறக்கிறதுக்கு முதலே நான் சமையல் படிச்சனான்” இப்படித்தான் தாயிடம் பின்னொரு நாளில் அவன் வேண்டிக் கட்டியதாய்க் கேள்வி.*

*பிற்காலத்தில் புலனாய்வு நிர்வாகப் பணிகளினுள் உள்வாங்கப்பட்டான். வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேதான் அவனது பணி.*

*அச்சமயம் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த வன்னியைச் சொந்த இடமாகக்கொண்ட ஒரு போராளி, வன்னியில் உள்ள தன் தங்கையை பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்குக் கதைத்துவிட்டு வாருங்கள் என்பதை மட்டுமே சொல்லிவிட, அவளைப் பாடசாலையில் சேர்த்துவிட்டு அந்தச் செய்தியை தொலைத்தொடர்பு சாதனத்தினூடாக அறிவித்த அவனது செயல் போராளிகளுடனான நேசத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.*

*1995, யாழ் இடம்பெயர்வின் பின் எதிரிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கவும் - புலிகளின் பலம் எதுவென நிரூபிக்கவும் - நீண்ட கடற்றொடர் ஒன்றினைக் கைப்பற்றவும் திட்டமிடப்பட்ட முல்லைச் சிங்களப் படைத்தளம் மீதான ஓயாத அலைகள் - 01 தாக்குதல் நடவடிக்கைக்கான பயிற்சிகள் ஆரம்பமாகியிருந்த வேளை.*

*இரகசிய பயணம் ஒன்றிற்கான ஆவணங்களை தயார்செய்து கொண்டிருந்த அவனும் சண்டையின் முக்கியத்துவம் கருதி, புலனாய்வுத்துறைத் தாக்குதல் படையணியுள் உள்வாங்கப்பட்டான்.*

*‘பயிற்சி’ நினைச்சுப் பார்க்க முடியாத அப்படி ஒரு கடும் பயிற்சி. சில மாதங்கள் நீண்ட பயிற்சி. பல படைணிகள் ஒன்று சேர்ந்திருந்த தளத்தில் புலனாய்வுத்துறைப் படையணியும் பயிற்சியில் முன்னணிவகிக்க ஊக்கியானவர்களுள் அவனும் ஒருவன்.*



**களம் திறந்த பொழுதில் எதிரியின் கடும் எறிகணை வீச்சில் - எறிகணை ஒன்று அவனருகே வெடிக்க அவன் எடுத்துச் சென்ற ‘ரோப்பிற்ரோ’ (Torpedo) அவனுடன் சேர்ந்தே வெடிக்க தடைகளுடன் அவனது உடலும் தகர்ந்து போயிற்று.**

*வட்டுவாகல் பாலத்தின் வலதுபக்க முன்னணி காவலரணின் தடையுடைத்து உட்புகும் அணி ஒன்றின் பொறுப்பாளர் அவன்.*

*18.07.1996 அதிகாலை முதலில் சண்டையைத் தொடங்கும் அணிகளில் அவனது அணியும் ஒன்று.*

*களம் திறந்த பொழுதில் எதிரியின் கடும் எறிகணை வீச்சில் - எறிகணை ஒன்று அவனருகே வெடிக்க அவன் எடுத்துச் சென்ற ‘ரோப்பிற்ரோ’ (Torpedo) அவனுடன் வெடிக்க தடைகளுடன் அவனது உடலும் தகர்ந்து போயிற்று. வெற்றிக்காக உழைத்து - அந்தச் செய்தியைக் கேட்குமுன் வீரச்சாவினைத் தழுவிய ஆயிரமாயிரம் மாவீரர்களினுள் அவனும் ஒருவன் ஆனான்.*

*அவனது உடல் அடையாளமின்றிப் போனதால், அவன் உயிர்நீத்த இடத்திலிருந்து இடுப்புப்பட்டி, கோல்சர், இன்னும் சிதறல்களை தேடித்தேடி எடுத்த அவனது தந்தை ‘அவன் போராட என்று புறப்பட்டவன் தன் கடமையை முடித்து வீடு வருவான்’ என்ற நம்பிக்கையுடன் இருக்க,*

*அவனது படத்துக்கு விளக்கேற்றச் சென்றால், பல்லி சொல்லித் தடுப்பதாக அம்மா சொல்லுறா.*

*‘குறி’ சொல்பவன் ஒருவன் அண்ணன் உயிருடன் இருப்பதாகவும் மற்றொருவன் ‘இல்லை’ எண்டும் மாறிமாறி சொல்வதாக அன்புத் தங்கை சொல்கிறாள்.*

*அவன் இன்னமும் அவர்களுள் ஒருவனாக வாழ்கின்றான் . அதனால்த்தான் இன்னும் அவர்களால் அவனது இழப்பை ஏற்க முடியவில்லை.*

*நான், மாவீரர் நாள் அன்று அவனது உடலை விதைத்த, கிளிநொச்சி துயிலும் இல்லம் சென்றேன் - அவனுக்கு விளக்கெரிக்க நிறையப்பேர் நின்றார்கள். அவனது பெற்றோரைத் தவிர.* •






www.eelamview.com

# அனுபவங்களின் ஞாபகங்கள்

ச.புரட்சிமாறன்

ஊர்கள் இப்போது சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றன. நாங்கள் அதிலிருந்து பின்நோக்கிச் செல்வோம். நாங்கள் எதிரிகளாலும் எதிரிகள் எங்களாலும் முற்றுகையிடப்பட்ட அந்த நாட்களுக்குள் செல்வோம். இத்தாவில் என்ற சொல்லை இப்போது நீங்கள் மறந்திருக்கவும் கூடும். ஆனால் ஒரு காலத்தில் அது ஒரு ஊரின் பேராக மட்டுமே இருந்தது. இப்போது அது ஒரு வரலாற்றின் பெயர். ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள், அந்த நாட்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து வருவது அந்த நாட்களின் அநுபவங்களின் ஞாபகப் பதிவுகள்.

அவர்கள் பெண்போராளிகள். இந்தச் சண்டைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பல அணிகளுக்குள் இவர்களும் ஒரு அணி. சண்டைக்கான ஆரம்பப்பணி படகில் சென்று எதிரியின் எல்லைக்குள் தரையிறங்குதல். கடல் எப்போதும் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது. அந்தக் கொந்தளிப்போடு இயந்திரத் துப்பாக்கிகள் பூட்டப்பட்ட அந்தப் படகிற்குள் பெண் போராளிகள் ஏறிக்கொண்டார்கள். கடற்பயணம் அவர்களில் பலருக்குப் புதிதாய் இருந்தது. பலருக்குத் தலைச்சுற்று வந்து பலர் படகில் இருந்தபடி வாந்தி எடுத்துக்கொண்டார்கள். வாந்தியால் ஏற்படும் உடற் களைப்பைப் போக்குவதற்கு குளிர்பானப் போத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்தப் படகில் இருந்த தளபதி மட்டும் இந்தக் கடற் பயணத்திற்கு ஈடுகொடுத்தவளாய் ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அந்தப் படகின் முன்னால் சண்டைப் படகொன்று அவர்களை அழைத்துக்கொண்டு சென்றபடியிருந்தது. அதற்குள் ஆண் போராளிகள், பெண்போராளிகள் என இருபாலாரும் இருந்தார்கள். அந்தப்படகு எதிரியின் சண்டைப் படகுகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டிருந்தது.

கடற் பயணத்தின் ஒரு கட்டத்தில் ஒன்பதுக்கு மேற்பட்ட எதிரி டோறாப் படகுகள் அவர்களை வழிமறிக்க முயற்சிக்கின்றன. சண்டை மூழ்கின்றது. பகற்பொழுதின் வெளிச்சத்தை மேவியபடி இயந்திரத் துப்பாக்கிகள் வெடிக்கும்போது ஏற்படும் தீப்பொறி கண்ணுக்குத் தெரிந்தது. கடலில் ஆங்காங்கே தொட்டம் தொட்டமாய் கடற்புலிகளின் சண்டைப் படகுகள், படகுகளில் நகரும் படையணிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்தபடி எதிரியின் டோறாப் படகுகளுடன் மோதிக் கொண்டிருந்தன. இவர்களின் படகின் இயந்திரங்களும் இடையில் இயங்க மறுத்தன. அந்த இயந்திரங்களுக்கு அருகில் இருந்த கடற்புலிப் பெண்போராளிகள் அந்த இயந்திரங்களின் எண்ணெய் இணைப்புக்களைக் கழற்றி வாயில்வைத்து ஊதி மீண்டும் இணைப்புக்களைப் பொருத்தி இயந்திரங்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்தார்கள். படகு கொஞ்சம் நகருவதும் பின்னர் படகு நின்றதும் அந்த இளம் பெண் இயந்திரவியலாளர்கள் இயந்திரத்துடன் போராடுவதுமாய் அவர்களின் பயணம் தொடர்ந்தது.

படகுகள் இயந்திரங்கள் இயங்க மறுத்த நிலையில் கடலில் சுற்றியதால் களைப்படைந்த பல பெண்போராளிகள் படகுக்குள் மயங்கிக் கிடந்தார்கள். படகு ஒருவாறு இலக்கைச் சென்றடைகின்றது. படகு இலக்கைச் சென்றடைந்ததும் நல்ல வேளையாய் எவரும் மயக்கத்தில் இருக்கவில்லை. எல்லோரும் தங்களது துப்பாக்கிகளையும் உணவுப் பொட்டலங்களையும் மண்வெட்டிகளையும், உரப்பைகளையும் தூக்கியபடி படகில் இருந்து கடலிற்குள் குதித்து கரையை நோக்கி நடந்தார்கள். அவர்கள் படகிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும்போது அந்தப் பகுதியெங்கும் எதிரியின் கடற்கலங்களும் வான் கலங்களும் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

படகில் இருந்து இறங்கி கொஞ்சத் தூரம் நடந்ததும் நீரேரி ஒன்றை அவர்கள் கடக்கவேண்டியிருந்தது. படகுப் பயணத்தின் களைப்பு உடலை இயங்கவிடாமற் தடுத்த போதும் அவர்கள் அந்தச் சகதி நிறைந்த ஏரிக்குள் இறங்கினார்கள். அவர்களில் உயரம் குறைந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் சிலவேளைகளில் தண்ணீருக்குள் மறைந்தும் தத்தளித்தும் மற்றவர்களின் தோள்களைப் பற்றியும் என ஏதோவொரு வழியைத் தேர்ந்தெடுத்து நகர்ந்து கொண்டிருந்தார்கள். அந்த நீருக்குள்ளும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.



போர்க்களத்தின் எந்தவொரு சுமையும் ஆண் போராளிகளிற்குச் சமனாய் அவர்களுக்கு மிருந்தன. அவர்களும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காய் ஆண் போராளிகளிற்குச் சமனாய் தங்களுக்கு குறிக்கப்பட்ட பகுதி நோக்கி நகர்ந்தார்கள்.

அதிகாலைப்பொழுதில் படகேறியவர்கள் மாலை மங்கிய பொழுதில் இத்தாவிலைச் சென்றடைந்து கண்டி றோட்டைக் கடந்து கிளாலிப் பக்கமாய் தங்களுக்குத் தரப்பட்ட இடங்களைச் சென்றடைந்தார்கள். நீண்ட பயண களைப்பை அவர்கள் அநுவித்தபோதும் ஓய்வு எடுப்பதற்கு அது பொருத்தமான நேரமாக இருக்கவில்லை.

**50கலிபர் துப்பாக்கியொன்று தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தது. அந்தத் துப்பாக்கியின் நிலையில் இருந்தபடி ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பெண்போராளிகள் தொலைத்தொடர்புக் கருவியில் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குரலும் மாறும்போதும் ஏற்கனவே ஒலித்த குரல் வீரச்சாவடைந்திருந்தது.**

தொடர்ந்து நிகழப்போகும் சண்டைகளுக்குள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தற்காப்பு நிலைகளை அமைக்க வேண்டியிருந்தது. தாங்கள் தோள்களில் சுமந்துவந்த மண்வெட்டிகளை நினைத்து அவர்கள் சந்தோசப்பட்டார்கள். ஏனெனில் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அவை பெரிதும் உதவின. உரப்பைகள் கொண்டுவரத் தேவையில்லையென்று யாராவது நினைத்திருந்தால் இப்போது அவர்கள் அதற்காக வருந்தியிருப்பார்கள்.

பயணக்களைப்பு மறைந்துகொண்டிருக்கும்போது பசியெடுத்தது. ஏற்கனவே அவர்களிற்குச் சொல்லியிருந்ததன் படியும், வழங்கப்பட்டிருந்ததன்படியும் அந்த நேரத்திற்குரிய உலர் உணவை, பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்து எடுத்து உண்டார்கள். அந்த இரவுப்பொழுது முழுதும் இத்தாவில் என்ற ஊரை மையப்படுத்தி கண்டி றோட்டை ஊடறுத்து எல்லாப் பக்கங்களிலும் நிலையமைத்து ஆனையிறவிற்கான எதிரியின் தொடர்பைத் துண்டித்தார்கள். எதிரியால், இந்தச் சண்டையைத் திட்டமிட்ட தமிழீழத்தின் தலைவனின் திட்டத்தை புரிய முடியாமலிருந்தது. இது ஒரு மடத்தனமான வேலையென அப்போது எதிரி எண்ணியிருக்கவும் கூடும் ஏனெனில் இதை முறியடிப்பதில் அவர்களுக்கு நூற்றுக்கு நூறுவீதம் நம்பிக்கையும் இருந்தது. அவர்கள் காலம் காலமாய்த் தாங்கள் போட்டு வந்த தப்புக்கணக்கின் வரிசையில் இதையும் போட்டுக்கொண்டார்கள். அதைத் தவிர இந்த இடத்தில் அவர்களைப்பற்றிச் சொல்ல வேறொன்றும் இல்லை.

தொடர்ந்து வந்த நாட்கள் சவால் மிக்க நாட்களாய் அமைந்தன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு வினாடியும் என சண்டையின் ஒலிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன.

சண்டையைத் தொடங்கியபோது அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி அவர்களுக்குப் பக்கவாட்டாய் இருந்த தொடர்புப்பாதை குறித்த நாளில் பிடிபட்டிருக்கவில்லை. அதனால் முதல்வந்த நாட்களில் அந்த இத்தாவிலுக்குள் இருந்தோர் மற்ற அணிகளுடன் தரைத்தொடர்பு ஏதுமற்ற நிலையில் இருந்தார்கள். இதனால் சண்டையில் காயப்பட்டவர்களையும் சண்டையில் வீரச்சாவடைந்த தங்களின் தோழிகளின் உடல்களையும் தங்களுடனேயே வைத்திருக்க வேண்டியிருந்தது.

அந்தத் தரைப்பாதையை இணைப்பதற்காய் களமிறக்கப்பட்ட அணிகள் எதிரியின் முகாம்களைச் சிதைத்தபடி அவர்களை வந்தடையும் வரை அவர்கள் காத்திருக்கவேண்டியிருந்தது.

அது ஒருவாறு முடிவுக்கு வந்ததும் இத்தாவிலில் இருந்த அணிகளுக்கு வெளியில் இருந்து ஆயுதங்களும், உணவுப் பொருட்களும் கிடைத்துக்கொண்டிருந்தன. இந்த முற்றுகையின் முறியடிப்பிற்காய் எதிரி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முனையாய்த் தேடி முட்டிக்கொண்டிருந்தான்.

இந்த நாட்களில் எங்களில் பல வீரர்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள். சிலர் நிரந்தரமாய் அடங்கிப்போனார்கள். அந்த வீரர்களின் குரல்கள் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டிருக்க ஏனையோர் இலக்குகளுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்

10.04.2001 அன்று அந்த முற்றுகையின் முக்கியமான நாள். அன்றைய நாளில் எதிரியின் திட்டப்படி இத்தாவிலில் நின்ற கேணல் பால்ராஜ் தலைமையிலான புலிகளின் படையணிகள் உயிருடனோ அன்றி பிணமாகவோ கைப்பற்றப்படவேண்டும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் எதிரிகள் செய்திருந்தார்கள்.

அதற்கு ஏற்றபடி அந்த கேணலின் தலைமையிலான படையணிகளும் தயாராகவிருந்தன. சண்டை தொடங்குகின்றது. இந்தப் பெண் போராளிகளின் பகுதியை நோக்கியும் இராணுவத்தின் டாங்கிகளும் காலாற் படைகளும் நகருகின்றன. டாங்கிகளின் இரைச்சல் காதைப் பிளக்கின்றது. எத்தனை டாங்கிகள் எந்தப் பகுதிகளால் வருகின்றன என்று அனுமானிக்க முடியாமலிருந்தது.

குறிப்பிட்ட நேரச் சண்டையின் பின் எதிரிகளின் படையணிகளும் கவச வாகனங்களும் எங்கள் காப்பரண்களை ஊடறுத்துக் மேவியும் உள்நுழைகின்றன. சண்டை உள்ளும் வெளியுமாய் நடைபெறத் தொடங்குகின்றது. யாரும் பின்வாங்கி ஓடவில்லை. இந்தப் பெண்போராளிகளும் தங்கள் நிலைகளில் நின்றபடி சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் இந்த நிலைகளிலேயே சண்டையிட்டபின் வீரச்சாவடைந்தார்கள்.

பல போராளிகளின் தொடர்பு கட்டளையிடும் பெண் தளபதிக்கு இல்லாமல் போகின்றது. அந்தப் பகுதியில் ஒரு காப்பரணில் நிலைப்படுத்தப்பட்ட 50கலிபர் துப்பாக்கியொன்று தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தது. அந்தத் துப்பாக்கியின் நிலையில் இருந்தபடி ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பெண் போராளிகள் தொலைத்தொடர்புக் கருவியில் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குரலும் மாறும்போதும் ஏற்கனவே ஒலித்த குரல் வீரச்சாவடைந்திருந்தது. இப்படியாய் அந்தத் துப்பாக்கியில் நின்ற மணிமேகலை, பிரியங்கா, பிறேமினி, சிவப்பிரியா, மைவிழி எனப் பல பெண்போராளிகளின் தொடர்பு இல்லாமல் போய்க்கொண்டிருந்தது.

பதுங்குகுழியின் வாசலில் நின்று திசையறி கருவியில் பாகை பிடித்த மணியிழை வெடிபட்டு பதுங்குகுழிக்குள் வீழ்ந்தாள். தொலைத்தொடர்புக் கருவியில் தகவல் தந்த மயூரி ‘ஐ’ பங்கரிற்குள் வீழ்ந்தாள்.

அன்றைய நாளில் எங்கள் பதுங்குகுழிக்குள்ளேயே எங்கள் தோழிகள் தோழர்கள் எனப் பலர் வீழ்ந்தார்கள். இங்கே வீழ்ந்தவர்கள் அன்றைய நாளில் அந்த இத்தாவிலை எங்களுக்குத் தக்கவைத்துத் தந்தார்கள். அதன் பயனாய் நாங்கள் ஆனையிறவை மீட்டுக் கொண்டோம். வீழ்ந்தவர்கள் விதையாகிப்போய் எங்களுக்குள் இருந்தபடி அவர்கள் துளிர்த்துக் கொண்டிருப்பதால் விடுதலை நெருப்பு எப்போதும் அணைந்துவிடப் போவதில்லை.

# அமைதிக்கு அவமானம்




ஐக்கிய நாடுகள் தாபனம் (United Nations) இன்று உலகளாவிய ரீதியில் பல்வேறுபட்ட பொறுப்புமிக்க பணிகளை ஆற்றி வருவது நாம் அறிந்ததே. இவற்றுள் ஐ.நாவின் "அமைதியும் பாதுகாப்பும்" (Peace and security) என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்த அமைதிகாப்புப் பணி (Peace keeping Mission) சிறப்பிடம் பெறும் ஒன்றாக கருதப்படுகின்றது. 1948ஆம் ஆண்டுமுதல் ஐ.நா பல்வேறு நாடுகளிலும் அமைதிகாப்புப் பணியை மேற்கொண்டு வந்துள்ளது.

இவ்வகையில் தற்போது கெய்ற்றி (Haiti) நாட்டிலும் ஐ.நா தனது பணியை ஆரம்பித்துள்ளது. "கெய்ற்றியில் ஐ.நாவின் உறுதிப்படுத்தும் நடவடிக்கை" (UN Stabilization Mission in Haiti) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்நடவடிக்கையில் பங்குகொள்ளவென ஐ.நாவினால் தெரிவு செய்யப்பட்ட பன்நாட்டு இடைக்காலப் படையினர் ( Multi - nations Interim Force – MIF) கெய்ற்றியினை சென்றடைந்த வண்ணம் உள்ளனர்.

இது ஐ.நாவின் வழமையானதொரு நடவடிக்கையாக, நடைமுறையாக கொள்ளப்படுகின்ற போதிலும் இப் பன்னாட்டுப் படையில் **சிறிலங்காப் படைத்தரப்பும்** பங்குகொள்ளும் செய்தியை ஒரு சாதாரண விடயமாக கருதிவிடமுடியாது. ஒரு அமைதிப்பணியில் ஈடுபடத்தக்க எவ்வகைக் குறைந்தபட்ச தராதரத்தையும் கொண்டிராத, எத்தகைய தார்மீகத் தகுதிகளுமற்ற ஒரு காடையர் கூட்டம் ஐ.நா அமைதிப் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை சிறிலங்காப் படையினரின் கொடூரங்களை அனுபவித்த, அறிந்த எவராலும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இனப்படுகொலை, கொடூர சித்திரவதைகள், கூட்டுப் பாலியல் வல்லுறவு, சூறையாடல், ஆட்கடத்தி காணாமற் போகச்செய்தல் என மனிதகுலத்திற் கெதிரான அத்தனை கொடூர குற்றங்களையும் புரிந்துள்ள, புரிந்துவரும் ஒரு குற்றக் கும்பலை ஐ.நா தனது அமைதிப்பணியில் இணைத்திருப்பது அதன் ஒட்டுமொத்தப் பணிகளுக்கே களங்கம் கற்பித்ததற்கு ஒப்பாகும்.

இலங்கைத் தீவில் இதுவரை 60,000ற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் சிறிலங்காப் படைத்தரப்பால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது, ஆதாரபூர்வமாக அறிக்கையிடப்பட்டுள்ளது. தமிழர்கள் அமைதிவழியை அன்றி வேறெதையும் அறியாதவர்களாக இருந்த ஐம்பதுகளில் இருந்தே இப்படுகொலைகள் மிக நுட்பமாக திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இனக் கலவரங்களாக, உடும்பன்குளமாக, வந்தாறுமூலை பல்கலைக்கழக மாக, சத்துருக்கொண்டானாக, கொக்கட்டிச் சோலையாக, குமாரபுரமாக, ஒதியமலையாக, நவாலித் தேவாலயமாக, குமுதினிப் படகாக, வல்வை நூல்நிலையமாக... என நீண்டு செல் லும் கொலைக்களங்கள் சிறிலங்காப் படைத்தரப்பின் இனக்கொலை வெறித்தனத்தை எடுத்துக்காட்டி நிற்கின்றன.

காரணம் எதுவுமின்றி வயது, பால் வேறுபாடின்றி ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டனர். அதில் அனேகர் "காணாமற் போனவர்கள்" என பட்டியலிடப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் வருடக்கணக்கில் விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டு கொடிய சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர். பூசா, வெலிக்கடை, மகசின் என தடுப்பு முகாம்களை நிறுவி புதிய புதிய சித்திரவதை முறைகளையும், சித்திரவதைக் கருவிகளையும் அப்பாவிகளின் மேல் பரிசோதித் துப் பார்த்ததும் இந்த சிறிலங்காப் படைத்தரப்பே. வைத்திய பரிசோதனைகள் தந்த ஆதாரபூர்வமான தகவல்கள் மானிட குலத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கக்கூடியளவு கொடுமையானவையும், கீழ்தரமானவையுமாகும். இன்றும் இந்தத் துன்பங்களுக்கும், சிறுமைகளுக்கும் முகம்கொடுத்த பலர் உயிருள்ள சாட்சிகளாக எம்மிடையே உள்ளனர்.

சிறிலங்காப் படைத்தரப்பால் பெண்ணினத்திற் கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள் கொஞ்சமல்ல. கணவனைக் கண்முன்னே கொல்லல், கூட்டுப் பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகள், அங்கச் சிதைப்புக்கள், கொலைகள் என பெண்கள் சிதைத்துச் சீரழிக்கப்பட்டார்கள். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து இன்னும் பிறக்காத சிசுவை நசுக்கிக் கொல்லும் சம்பவங்கள் கூட இங்கு சாதாரணமாக நடைபெற்றன. பாடசாலை மாணவி கிருசாந்தி (இவரைத் தேடிச்சென்ற தாய், சகோதரர், மற்றும் அயல்வீட்டார் படையினரால் கொல்லப்பட்டமை நாம் அறிந்ததே) குடும்பப் பெண் கோணேஸ்வரி, கோகிலாம்பாள் ஆகியோருக்கு நிகழ்ந்த கதி ஊடகங்களில் வெளிச்சத்திற்கு வந்தபோது மானிடமே தலை குனிந்துகொண்டது. நிர்க்கதியான எத்தனை பெண்கள் இவ்வாறு இச் சிங்களப் படையினரால் சிதைக்கப்பட்டிருப்பார்கள். கோணேஸ்வரியை கூட்டு வல்லுறவிற்கு உட்படுத்திய பின் சிங்களப் படைத்தரப்பு காடைக்கும்பல் அவரின் பிறப்புறுப்பில் கைக்குண்டை வெடிக்கவைத்துக் கொலைசெய்த கொடூரம் அவர்களின் வெறித்தனத்தின் தன்மையை வெளிக்காட்டப் போதுமானது.

இன்றும் காணாமற்போனோர் என்ற பட்டியலினுள் அடக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களில் நூற்றுக் கணக்கானவர்களின் எலும்புக்கூடுகள், எச்சங்கள் செம்மணி, மிருசுவில், கிளிநொச்சி என தோண்டும் இடங்களிலெல்லாம் தொடர்ந்தும் வருகின்றன. சர்வதேச கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இதுவரை மறுத்துவரும் சிறிலங்கா தனது படைத்தரப்பினர் மூலம் இலட்சக் கணக்கான கண்ணி வெடிகளை தமிழர் வாழ்விடங்களில் புதைத்துவைத்துள்ளது. இதன் விளைவாக நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தும் ஆயிரக்கணக்கானோர் அங்கவீனராக்கப் பட்டிருப்பதும் ஆதாரபூர்வமானவையே.

மனிதகுல மேம்பாட்டிற்கு ஆணிவேராக விளங்கும் கல்வி, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை தமிழர் தாயகத்தில் சிதைத்து அழிப்பதில் சிறிலங்காப் படைத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகளை நாடறியும். தென்னாசியாவிலேயே மிகச் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ்.நூலகம், இக் காடையரால் தீயிட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டது. பாடசாலைகள் குண்டுவீசி அழிக்கப்பட்டன. பல படைத் தளங்களாயின. நாகர்கோவில் பாடசாலையில் அந்தப் பிஞ்சு மாணவர்களுக்கு நடந்த கோரம்... எத்தனை சிறுவர்கள் உடல் சிதறிச் செத்தார்கள். வழிபாட்டிடங்களைக்கூட இவர்கள் தகர்த்தெறியத் தயங்கவில்லை. நூற்றுக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. அநேகமானவை வழிபாட்டிற்கு மறுக்கப்பட்டன. மேலும் தமிழர் தாயகத்தில் போதைப்பொருள் பாவனையை திட்டமிட்டு பரப்பியதும், ஆபாசப் படங்களை ஆயிரக்கணக்கில் உலவவிட்டதும் இந்தச் சிறிலங்காப் படைத்தரப்பே என்பதையும் சுட்டிக்காட்டல் அவசியம்.

**– சுரேன் –**

இத்தகைய கொடூர குற்றச்செயல்களை சிங்களப் படையினர் இப்போது தமிழருக்கு எதிராக மட்டுமே செய்கின்றார்கள் என நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. தமிழினத்தின் மீது கொடூரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு பழகிப்போன இவர்களுக்கு வெறித்தனம் இன்று ஒரு உடன்பிறந்த இயல்பாகவே உருவெடுத்துவிட்டது. இன்று சிறிலங்காப் படையினர் தமது சொந்த இனத்தைக்கூட கொன்றொழிக்கத் தயங்காத கொடியவர்களாக உருவெடுத்துள்ளனர்.

1971இல் நடைபெற்ற JVPயின் கிளர்ச்சியின்போது JVPயினரும் அப்பாவிச் சிங்கள இளைஞர், யுவதிகளுமாக 25,000ற்கு மேற்பட்டோர் படைத்தரப்பால் கண்மூடித்தனமாகக் கொலைசெய்யப்பட்டனர். பின்னர் 1989ஆம் ஆண்டு மீண்டும் JVP கிளர்ச்சியை ஆரம்பித்தபொழுது சிறிலங்காப் படையினரும் JVP யினருமாக 65,000ற்கும் மேற்பட்ட தம்மினத்தவரையே படுகொலை செய்தனர். இன்னும் சூரியகந்த புதைகுழி போன்று பல புதைகுழிகளில் இருந்தும் இவர்களால் கொல்லப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளும் எச்சங்களும் எழலாம்.

இன்று சிறிலங்காவில் 28ற்கு மேற்பட்ட பாதாள

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

---

A senior military officer confided to the Sunday leader that around 300 to 400 men identified as belonging to special forces teams in Sri lanka army have been trained to killed without restrain.

- Fredica Janz -

---

*சிறிலங்கா இராணுவத்தில் விசேட படைக் குழுக்களின் உறுப்பினர்கள் என இனங்காணப் பட்ட 300–400 வரையான ஆட்களுக்கு கட்டுப்பாடின்றிக் கொலைசெய்வதற்கு பயிற்சி யளிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா உயர் இராணுவ அதிகாரியொருவர் சண்டே லீடருக்குத் தெரிவித் தார்.*

- சிறிலங்காவிலிருந்து வெளிவரும் சண்டே லீடர் பத்திரிகையின் கட்டுரையாளர் பிரடிகா ஜான்ஸ் -



www.eelamview.com

**(04ஆம் பக்கத் தொடர்ச்சி)**

துர்ப்பேறு வசமாகவோ அல்லது நற்பேறு வசமாகவோ இக்கட்டுரையாளர் எழுபதுகளில் பதவி, சிறிபுர பகுதியில் நடமாடி அங்குவாழ்ந்த மக்களுடன் கலந்து பழகியவர். நட்டாமுட்டித்தனம் காரணமாக தம் சொந்த ஊர்களிலிருந்து கலைபட்டவர்கள் தான் பதவி, சிறிபுர பகுதியில் குடியமர்த்தப்பட்டதாக சிங்கள முதியவர்களே கட்டுரையாளருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும்விட திரு.S.L.குணசேகர 02.12.2003 ஆம் திகதிய டெய்லி நியூசில் (பக்11) கலாநிதி H.M எழுதிய கட்டுரையில் தந்திருக்கும் கிழக்கின் குடிசன அதிகரிப்பு பற்றிய அட்டவணையைப் பார்ப்பது நல்லது. அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் அடங்கிய விவரம் இது. (விவரம் விகிதங்களில்)

| | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1961 | 1971 | 1981 | 2001 | 2003 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முஸ்லிம்கள் | 45.2 | 45.6 | 45.2 | 45.9 | 42.9 | 38.1 | 34.6 | 33.2 | 33.1 | 39.4 | 40.1 |
| தமிழர் | 50.6 | 50.5 | 50.4 | 50.1 | 48.9 | 47.3 | 45.1 | 42.9 | 42.9 | 33.2 | 32.1 |
| சிங்களவர் | 02.4 | 02.4 | 02.4 | 02.4 | 06.4 | 13.1 | 20.1 | 24.7 | 24.9 | 27.0 | 26.5 |
| ஏனையோர் | 01.8 | 01.5 | 02.0 | 01.8 | 01.8 | 01.5 | 00.2 | - | - | 00.4 | 01.1 |

இலங்கையின் சராசரி குடிசன அதிகரிப்பு 4% ஆகும். ஏனைய இனங்களின் குடிசனத்தொகை இதற்கு அமைவாக அதிகரித்து அல்லது குறைந்து செல்கையில் சிங்களவர்களின் தொகை சுதந்திரத்தின் பின் பாரிய அளவில் அதிகரித்துச் சென்றது எப்படி என்று திரு.S.L.குணசேகர விளக்குவாராயின் அவர் குறிப்பிட்டவர்களின் தலைவிதி பற்றி கவலைப்படுவதில் பொருள் இருக்கிறது. தமிழர்களின் தொகை பெருமளவில் குறைந்தமைக்கு, அவர்கள் பலவந்தமாக இடம் பெயர்க்கப்பட்டது, கொலை செய்யப்பட்டது தான் காரணங்கள் என்று சொன்னால் திரு. குணசேகரவால் மறுக்கமுடியுமா?

ஒரு நாட்டின் உள்நாட்டு பிரச்சினைக்கு ஒரு நாட்டுக்கு பொருத்தமாக இருந்த தீர்வு இன்னொரு நாட்டுக்கு 100 விழுக்காடு பொருந்தாதெனினும்,

புலிகளின் நிலைப்பாடு எவ்வளவு நியாயமானது என்பதை நிறுவும் வகையில் ஏற்கனவே சூடானின் உள்நாட்டுப் பிரச்சினைத் தீர்வில் செய்யப்பட்ட இடைக்கால நிர்வாக ஒப்பந்தத்தின் சில சரத்துக்களைப் பார்ப்போம்.

2002, யூலையில் செய்யப்பட்ட மக்கா கொஸ் ஏற்பாடுகள் (பார்க்க - ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டெழும் சூடான் - 'விடுதலைப் புலிகள்' ஏடு. தை, 2004)

இடைக்காலத்தின்போது வெவ்வேறு கட்டளைப் பீடங்களின் கீழ் இரண்டு இராணுவங்களை சூடான் கொண்டிருக்கும்.

விரிவான சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்களில் அரசுப் படைகளில் 10,000பேர் தவிர்ந்த 80%மானோர் மீளப் பெறப்படுவார்கள்.

SPLA ஆனது அதன் படைகளில் 80%ஐ தென்சூடானில் வைத்திருக்கலாம்.

6 வருட சுயாட்சி வழங்கப்படும்.

வடக்கில் ஷாரியா சட்டம் (இஸ்லாமிய சட்டங்கள்) வழக்கிலிருப்பதை SPLA ஏற்கிறது.

பேசித் தீக்கவேண்டியவை:

- எண்ணெய் மூலமான வருமானத்தைப் பகிர்ந்துகொள்வது எப்படி,
- நீர் வளங்கள் கொண்ட மலைப்பகுதிகளின் தகுநிலை,
- அரசியல் அதிகாரப் பகிர்வு.

சிறிலங்கா அரசியலமைப்புக்கு வெளியே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தீர்வுகாண முடியாது என்று கூறப்படுகிறது. அரசியலமைப்பு தீர்வுக்கு இணக்கமாக இல்லாவிடின் தீர்வுக்கு இணக்கமாக அரசியலமைப்பை மாற்றமுடியாத அளவுக்கு அது ஒன்றும் "SANCTUM SANCTOR" (புனிதத்துக்குள் புனிதமானது) அல்ல. ஏற்கனவே 17முறை திருத்தியமைக்கபட்டிருப்பது தான்.

**தனிப்பட ஒரு சந்திரிக்காவின் பதவி நீடிப்புக்காக அரசியலமைப்பை திருத்த முயற்சி எடுக்க முடியுமாயின், முழுநாட்டு மக்களினதும் நலனுக்காக அரசியலமைப்பை 18வது தரம் திருத்துவது என்பது ஒன்றும் கடினமான விடயமல்ல. அத்தோடு இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஏற்பாடு 5 வருடங்களுக்கே நடைமுறையிலிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.**

எனவே, சிங்களம் தனது தனிப்பட்ட அல்லது கட்சிசார்ந்த நலன்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்மக்களின் நிலைப்பாட்டை புரிந்து கொண்டு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டியது அத்தியாவசியமானதாகும். ●

---

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இன்று சிறிலங்காவில் 28இற்கு மேற்பட்ட பாதாள உலக குழுக்கள் இயங்குவதாக பொலிஸ் தலைமையகம் தகவல் தருகின்றது. இவர்களால் போதைவஸ்து கடத்தல், கொந்தராத்து கொலைகள், வங்கிக் கொள்ளைகள், வாகனக் கடத்தல்கள் என குற்றச்செயல்கள் பல்கிப் பெருகியுள்ளன. இத்தகைய பாதாள உலக கும்பல்களிலே அனேகர் சிறிலங்காப் படைவிட்டோடிகளே என்பதும் தற்போது சேவையிலுள்ள படைத்தரப்பினருக்கும் இவர்களுக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன என்பதும் பத்திரிகைகளில் அடிக்கடி வரும் செய்திகளே. இன்று 38,000ற்கு மேற்பட்ட சட்டத்திற்குப் புறம்பான நவீன ஆயுதங்கள் இத்தகைய குழுக்களிடம் இருப்பதாக அரசதரப்பு அறிவிக்கின்றது. இவற்றில் பெரும்பகுதி படைத்துறைக் களஞ்சியங்களில் இருந்து கையாடப்பட்டு விற்கப்பட்டவையே என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்கின்றன.

They had no understanding right or wrong and thought nothing of wiping out Tamils. Some people We trained committed atrocities.

- IMMEDIATE ACTION - (P.181)
By: Andy Mcnab (SAS - DCM MM) -

*அவர்களுக்குச் சரிபிழை என்று எதைப்பற்றிய விளக்கமும் இல்லை. அத்துடன் தமிழரை அழித்தொழிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறெந்த சிந்தனையும் இல்லை. நாங்கள் பயிற்சியளித்தவர்களில் சிலர் கொடூர குற்றங்கள் புரிந்தவர்கள்.*

- பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் படைப்பிரிவின் சார்ஜன்ட் அன்டி மக்நப் எழுதிய இமிடியேற் அக்சன் என்ற நூலில் இருந்து -

சிறிலங்காப் படைத்தரப்பில் ஜெனரல் முதல் லான்ஸ் கோப்ரல் வரை லஞ்சம், ஊழல், மோசடி என்பன மலிந்துபோய்க் கிடக்கின்றன. முன்னாள் சிறிலங்காவின் ஜெனரலும் சனாதிபதி சந்திரிகாவின் மாமனாருமான அனுருத்த ரத்வத்த வங்கிகளில் பதுக்கி வைத்திருந்த ஐந்தரைக்கோடி ரூபா மோசடிப்பணம் மீட்கப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது. (தேர்தல் காலத்தில் உடத்தலவின்னவில் 10 அப்பாவி முஸ்லிம்கள் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்திற்கும் இவரே காரணமானவர் ஆவார். இது தொடர்பில் இவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது) அண்மையில் சிறிலங்கா இராணுவத்தின் பொது அதிகாரிகள் குழாம் இயக்குனர் நாயகமான (The Army's Director General of General Staff) மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய முறைகேடாக சொத்துச் சேர்த்தமைக்கு எதிராக குற்றவாளியாகக் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டார். மேலும் சிறிலங்கா இராணுவத் தரப்புப் பேச்சாளரான கேணல் சுமேத பெரேரா இத்தகையதொரு குற்றச்சாட்டுக்கு உட்பட்டுள்ளார். அத்துடன் மேலும் நான்கு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் மீதும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. வத்தேகம பகுதியில் வாகனம் ஒன்றை களவாடிச்சென்ற ஒரு மேஜர் அதிகாரியும் ஒரு கோப்ரலும் ஏனைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பல கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்பது பிந்திக் கிடைத்த செய்தி.

இதைவிட வெளிநாட்டுப் பயிற்சிக்கென அனுப்பிவைக்கப்படும் சிறிலங்காப் படைத்தரப்பு அதிகாரிகள் அங்கு நடந்துகொள்ளும் விதம் பற்றியும் எம்மால் அடிக்கடி அறிய முடிகின்றது. "உதவியாளராக விடப்பட்ட வெளிநாட்டுப் பெண் சார்ஜன்டுடன் முறைகேடாக நடக்க முயற்சித்ததால்...", "படைத் தொகுதியில் பொருட்களைக் களவாடியதால்" என கழுத்தைப் பிடித்து தள்ளப்பட்ட சிறிலங்காப் படைத்தரப்பு அதிகாரிகள் பலர்.



சிறிலங்கா படைத்தரப்பால் கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 185 அப்பாவிப் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி

There were seven young men laying in the middle of the road tied togather. They were anywhere between eighteen and twenty - five years old. They had been 'necklaced.' around each man's neck was a burning car tyre. Their bodies bore signs of torture. Knives had gashed their skin, blunt instruments had bruised their joints and cigarette stubs had burn holes all over their bodios. Their throats had been slit. Blood had trickled down to stain the road. They were all dead. Their eyes were closed, their bodies still. But I thought I heard one young man gasp I could have sworn I saw his toe twitch. I saw a gash of blood spurt from his slit throat. And then, nothing

- ISLAND OF BLOOD - (P.109)
By: Anita pratap

*"ஏழு இளைஞர்கள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு வீதியின் மத்தியில் கிடந்தார்கள். எரிகின்ற கார் டயர்கள் அவர்கள் ஒவ்வொருவரினதும் கழுத்தைச் சுற்றியும் மாலையாய் இடப்பட்டிருந்தன. சித்திரவதையின் அடையாளங்களால் அவ்வுடல்கள் துளையிடப்பட்டிருந்தன. அவர்களின் தோள்களில் கத்திகள் ஆழமான பிளவுகளை ஏற்படுத்தியிருந்தன. மூட்டுக்களில் கூர்மையற்ற ஆயுதங்கள் சிராய்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தன. அத்துடன் உடல் முழுவதும் சிகரட்டால் சுடப்பட்ட துளைகள் காணப்பட்டன. அவர்களது தொண்டைகள் கிழிக்கப்பட்டிருந்தன. குருதி தாரையாக வடிந்து வீதியில் படிந்திருந்தது. அவர்கள் யாவரும் இறந்துவிட்டார்கள். அவர்களுடைய விழிகள் மூடி உடல்கள் அசைவற்றிருந்தன. ஆனால் ஒரு இளைஞனின் சுவாசத்தை மட்டும் நான் கேட்டேன். அவனது கால் பெருவிரல் துடிப்பதை என்னால் காண முடிந்தது. கிழிக்கப்பட்ட அவனது தொண்டையில் இருந்து குருதி கொப்பளிப்பதைக் கண்டேன். அதன் பின் ஒன்றுமேயில்லை.*

- பிரபல இந்தியப் பத்திரிகையாளர் அனிதா பிரதாப் 1989இல் ஜே.வி.பியினரின் கிளர்ச்சியின்போது கண்டிப் பகுதியில் தான் நேரில் கண்ட காட்சியை தனது 'ஐலண்ட் ஒப் பிளட்' என்ற நூலில் மேற்கண்டவாறு விபரிக்கிறார். -

இவ்வாறாக எந்தவிதமான படைத்துறைசார் கட்டுக் கோப்புகளோ தார்மீகத் தகுதிகளோ அற்ற ஒரு குற்றக் கும்பலை அமைதிப் பணிக்கென ஐ.நா தெரிவு செய்துள்ளமை அதன் நம்பகத் தன்மையிலும் நடுநிலைமையிலும் சந்தேகங்களைத் தோற்றுவிக்க ஏதுவாய் அமைந்துள்ளது. மேலும் இத்தகைய குற்றக் கும்பல் அமைதிப் பணிக்காக கெய்ற்றிக்கு அனுப்பப்படுவது கெய்ற்றி நாட்டை, அதன் மக்களை முட்டாள்கள் என நினைத்து அவமானப் படுத்துவதற்கு ஒப்பாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக உலக மக்களால் மதிப்புடன் நோக்கப்படும் நீலத் தலைக்கவசம் (Blue Helmate) மனிதகுல அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் பொறுப்பான ஒரு குற்றக் கும்பலின் தலையை அலங்கரிப்பது அருவருக்கத்தக்க அநாகரிகமாகும். ●



www.eelamview.com

# பறிக்கப்பட்ட தமிழர் நிலம்:

தேசவிடுதலைப் போராட்டங்களில் ஒடுக்குகின்ற அரசுகள் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொள்வதுண்டு. அவற்றில் பிரதானமானதுதான் நிலப்பறிப்பு என்கின்ற குடியேற்ற நடவடிக்கைகள்.

தேசவிடுதலைப் போராட்ட வெற்றிக்கு போராடும் தேசத்தின் நிலரீதியான தொடர்ச்சி மிகமிக அவசியமான ஒன்று. போராட்டங்களுக்கான உயிரியல், பௌதீக வளங்களை நகர்த்தவும் தேசத்தில் வாழும் மக்களோடு போராட்ட அமைப்புக்கள் உயிர்ப்பான தொடர்புகளை வைத்திருப்பதற்கும் தேசத்து மக்களிடையே ஐக்கியத்தைப் பேணுவதற்கும் இந்த நிலத்தொடர்ச்சியின் பாதுகாப்பு மிக அவசியமானதாகும்.

ஆனால் மறுபக்கத்தில் தேசவிடுதலைப் போராட்டத்தினை ஒடுக்கும் அரசுகள் போராட்டத்தினை ஒடுக்குவதற்கு பிரதான கருவியாக நிலத்தொடர்ச்சியை சிதைக்கும் குடியேற்றங்களையே பயன்படுத்துவதுண்டு.

போராட்ட சக்திகள் நகரும் பாதைகளை அடைப்பதோடு, போராடும் மக்கள் தங்களுக்கிடையே தொடர்புகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளையும் இக்குடியேற்றங்கள் மூலம் இல்லாமல் செய்யப்பார்க்கின்றன. அத்தோடு ஒடுக்கும் சமூகம் சார்ந்த மக்களை அப்பிரதேசங்களில் குடியேற்றுவதன் மூலம் ஒடுக்கும் இராணுவத்தின் முகாம்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பினையும் வழங்குகின்றன. ஒடுக்கும் சமூகங்களிலிருந்து குடியேற்றுவதற்கு அச்சமூகத்தின் சாதாரண பிரஜைகள் பல சந்தர்ப்பங்களில் பின்னடிப்பதுண்டு. அக்கட்டங்களில் ஒடுக்கும் சமூகங்களில் உள்ள கிரிமினல் குற்றவாளிகளையே ஒடுக்கும் அரசுகள் பயன்படுத்துகின்றன.

**போராட்ட சக்திகள் நகரும் பாதைகளை அடைப்பதோடு, போராடும் மக்கள் தங்களுக்கிடையே தொடர்புகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளையும் இக்குடியேற்றங்கள் மூலம் இல்லாமல் செய்யப்பார்க்கின்றன. அத்தோடு ஒடுக்கும் சமூகம் சார்ந்தவர்களை அப்பிரதேசங்களில் குடியேற்றுவதன் மூலம் ஒடுக்கும் இராணுவத்தின் முகாம்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பினையும் வழங்குகின்றன.**

இந்த வகையான நிலப் பறிப்புகளுக்கு வரலாற்றில் எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் விதிவிலக்காக இருக்கவில்லை. பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இன்றும் ஒடுக்கும் இஸ்ரேல் அரசினால் குடியேற்றப்பட்ட மேற்குக்கரை, காஸாக் குடியேற்றங்கள் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் தடையாக இருக்கின்றது.

இதேபோல அயர்லாந்து மக்களின் போராட்டத்தினைச் சிதைப்பதற்காக புரட்டஸ்தாந்து மதத்தினைச் சேர்ந்தவர்கள் திட்டமிட்டு குடியேற்றப்பட்டனர். பிலிப்பைன்சிலும் மிந்தானோ மக்களின் போராட்டத்தினை நசுக்குவதற்கு குடியேற்றங்கள் பெரும்பங்கு வகித்திருந்தன.

எமது தமிழீழப் போராட்டத்திலும் போராட்டத்தினை நசுக்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் குடியேற்றங்களையே பெரும் கருவியாக பயன்படுத்தியது. இது விடயத்தில் நீண்டகால இலக்கின் அடிப்படையில் துல்லியமாகத் திட்டமிட்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தென் தமிழீழத்தின் தெற்குப் பகுதியில் கல்லோயாத்திட்டம் என்ற பெயரில் முதலாவது குடியேற்றம் உருவாக்கப்பட்டது. ஆனாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை திட்டமிட்டு சிதைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் திருக்கோணமலைக் குடியேற்றங்கள்தான்.

திருக்கோணமலை மாவட்டம் வட தமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் இணைக்கும் மையமாக இருப்பதும், சர்வதேச புவிசார் அரசியல் விடயத்தினைப் பொறுத்தவரை கேந்திர நிலையில் இருப்பதும்தான் இதற்குக் காரணம்.

இக்குடியேற்றங்கள் திருக்கோணமலை மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் பிரிக்கும் வகையிலும், அதேவேளை திருக்கோணமலை மாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் பிரிக்கும் வகையிலும் திருக்கோணமலை மாவட்டத்தினை வில்போல வளைத்து உருவாக்கப்பட்டுள்ளன.

குடியேற்றங்களை மேற்கொள்ளும்போது ஒரேமாதிரியான குடியேற்ற முறைகளை பின்பற்றவில்லை. மாறாக பல்வேறு வகையிலான குடியேற்ற முறைகளும் அதாவது எந்தெந்த வகைக் குடியேற்றங்களையெல்லாம் அமைக்க முடியுமோ அவற்றையெல்லாம் அமைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முறைசார்ந்த, முறைசாராத அணுகுமுறைகள் எல்லாம் பின்பற்றப்பட்டன. முறைசார்ந்த அணுகுமுறைகளில் அரசும், அரச இயந்திரங்களும் நேரடியாக பங்குபற்றின. முறைசாராத குடியேற்றங்களில் பௌத்தமத நிறுவனங்கள் முன்னணியில் நின்றன. அரச இயந்திரம் அதற்கு பாதுகாப்புகளை வழங்கியது. இப்பாதுகாப்புகளுக்கு அரசியல்வாதிகள் கவசமாக நின்றனர்.

முறைசார்ந்த, முறைசாராத குடியேற்றங்கள் இரண்டையும் இணைத்துப் பார்க்கின்றபோது குடியேற்ற மாதிரிகளாக திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத விவசாயக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம், கைத்தொழிற் குடியேற்றம், வியாபாரக் குடியேற்றம், புனிதப் பிரதேசக் குடியேற்றம், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றம் என்பவற்றை நாம் அடையாளம் காணலாம். இந்த மாதிரியான அனைத்துவகைக் குடியேற்றங்களையும் திருக்கோணமலை மாவட்டத்தில் நாம் காணலாம். அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளிலும் காணலாம்.

திருக்கோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களில் கந்தளாய்த்திட்டம், அல்லைத் திட்டம், மொறவேவாத் திட்டம், பதவியாத் திட்டம் என்பன முக்கியமானவையாகும். இத்திட்டங்களில் குடியேற்றுவதற்காக தென் இலங்கையில் இருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டனர். இதற்கான விண்ணப்ப கோரலின்போது தமிழ்ப் பிரதேசங்களில் அதிகளவிற்கு விண்ணப்பம் கோரப்படவில்லை. ஏனைய தமிழ்ப் பிரதேசங்கள் ஒருபக்கமிருக்க திருக்கோணமலைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு கூட முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. உதாரணமாக கந்தளாய் குடியேற்றத் திட்டத்திற்கு ஆட்களைத் சேர்க்கும்போது திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினூடாக மட்டும் கோரப்பட்டனர். ஆனால் சிங்களப் பிரதேசங்களில் அனைத்து மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவுகளினூடாகவும் கோரப்பட்டனர். தமிழரசுக் கட்சி வளர்ச்சியடைந்த பின்னரும்கூட காத்திரமான நடவடிக்கைகள் எடுக்காமைதான் மிகவும் கவலைக்குரியது. தமிழரசுக் கட்சியின் அரசியல் வலுவான நிலையில் இருந்த ஐம்பதுகளின் நடுப்பகுதியிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் திருமலை மாவட்டத்தின் திட்டமிட்ட குடியேற்றங்கள் அதிக வளர்ச்சி கண்டிருந்தன.

சிங்களப் பகுதிகளிலிருந்து திருமலையில் குடியேறிய குடியேற்றவாசிகளுக்கு அரச வசதிகள் பூரணமாக வழங்கப்பட்டன. அவர்களுக்கு வீட்டு நிலம், வயல் நிலம் என இரு வகையிலான நிலங்கள் வழங்கப்பட்டன. வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. தங்களுடைய சொந்தப் பிரதேசங்களிலிருந்து குடியேற்றப் பகுதிகளுக்கு உடமைகளுடன் வருவதற்கு விவசாய அமைச்சின் வாகனங்கள் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன.

அதேவேளை குடியேற்றக் கிராமங்களுக்கு பாதை வசதிகள், பாடசாலைகள், வைத்தியமனைகள், தபால் நிலையங்கள் சந்தைகள் என அடிப்படை வசதிகளும் உடனடியாக வழங்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது அவர்கள் தமது சொந்தக்காலில் நிற்கும்வரை மாதாந்த உதவித் தொகைகளும் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அதிக வசதிகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தபோதும் அதிகளவிலான மக்கள் ஆரம்பத்தில் குடியேறுவதில் அக்கறை காட்டவில்லை. மேலும் வசதிகளை அதிகரித்து பௌத்த மதகுருமார்களும், களத்தில் இறக்கிவிடப்பட்ட பின்னரே கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் குடியேறத் தொடங்கினர். அதேவேளை திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களோடு இணைத்து மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத விவசாயக் குடியேற்றத் திட்டங்களும் இரு குடியேற்றத் திட்ட வகைகளையும் பாதுகாப்பதற்கு உதவியிருந்தன. மக்கள் தங்கள் உறவினர்களோடு கூட்டம் கூட்டமாக குடியேறுவதற்கு சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள் பெரிதும் துணைபுரிந்தன.

**முறைசார்ந்த, முறைசாராத குடியேற்றங்கள் இரண்டையும் இணைத்துப் பார்க்கின்றபோது குடியேற்ற மாதிரிகளாக திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத விவசாயக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம், கைத்தொழிற் குடியேற்றம், வியாபாரக் குடியேற்றம், புனிதப் பிரதேச குடியேற்றம் முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றம் என்பவற்றை நாம் அடையாளம் காணலாம்.**

சட்டவிரோத குடியேற்றங்களை அமைக்கும் முறைமையும் மிக இலகுவாக இடம்பெற்றது. சிலவேளைகளில் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத்திட்டங்களை விடவும் மிக விரைவாகவும் இடம்பெற்றது. இவை அதிகளவில் பௌத்த பிக்குகளின் தலைமையிலேயே இடம்பெற்றன.



**– பைந்தமிழ் –**

---

*(01ஆம் பக்கத் தொடர்ச்சி)*

சந்திரிகா அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் சமாதானத்தை நேசிப்போரின் வேண்டுகோளாக உள்ளது.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபுமீது சர்வதேச சமூகமும் ஆதரவுப் போக்குடனேயே உள்ளது. புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச சமூகம் வழங்கிவரும் தற்போதைய ஆதரவு இதையே வெளிப்படுத்துகின்றது.

இந்த நிலையில், புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரைபின் அடிப்படையில் சந்திரிகா அரசு உடனடியாக பேச்சை ஆரம்பிப்பதே சாலச் சிறந்ததாகும்.

இதைவிடுத்து, மாற்றுத் தீர்வுத் திட்டம் ஒன்றை வரைந்து அதன் அடிப்படையிலேயே பேச்சை ஆரம்பிக்க முடியும் என்று சிங்கள அரசு பிடிவாதம் பிடிப்பது நியாயமற்றது. வரலாற்றைப் பின்நோக்கி நகர்த்த முனையும் அந்த வீண்முயற்சிக்கு ஒத்துழைக்க புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

தனது தீர்வுத்திட்டத்தை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறி புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேசப் பரப்புரையை அம்மையார் நடாத்தத் திட்டமிடுவதும் பயனளிக்கப் போவதில்லை. சிங்கள அரசுகளின் அரசியல் கூத்துக்களை இனியும் தலையாட்டியவாறு பார்த்து - இரசிக்க சர்வதேச சமூகம் தயாராக இருக்கமாட்டாது என்று தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

சந்திரிகா அரசை நோக்கிப் புலிகள் இயக்கம் விடுக்கும் அழைப்பு இதுதான். "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு துணிகரமான நகர்வுகளை - உறுதியுடன் முன்னெடுக்கவேண்டும்' என்பதுதான்.



www.eelamview.com

# கடற்கரை மணலில் கட்டிய வீட்டுக்கு வர்ணம் பூசாதே

கனவிற் கரைந்து ஆடைகலைவதும்
அறியாமல்
வாய்நீர் வடித்தது போதும்.
குடை, கொடி, ஆலவட்டப் பவனியில்
தோளில் உத்தரியச் சால்வை துலங்க
உலாப்போனதும் போதும்.
வெண்புறா நினைவில் மனமும்
வெள்ளைக்காரர் வருகையில் சனமும்
முட்டி மூச்சுத் திணறுகிறது.
ஏ 9 தெருவில் சமாதானப் பதாகை தாங்கிய
உறவுப்பால ஊர்வலம் போதும்.
'சிங்களச் சோதரருக்கு' விடுதலை பற்றி
விளக்க
நடத்திய பட்டிமன்றங்களும் போதும்.
புஷ்பக விமானப் பறப்பும்
கண்டவனுக்கெல்லாம் கம்பளம் விரிக்கும்
சேவகமும்
போதுமய்யா போதும்.
இந்தா வருகிறது கல்லறைத் திருநாள்
கார்த்திகைப் பெருநாள்.
கடந்த வருடங்களும்
விளக்கேற்றப்போனோம்.
குழியிலிருந்து வெளியேறிவந்து
செல்வங்கள் எம்மைஆரத்தழுவியபோது
கூனிக்குறுகியல்லவா நின்றோம்?
ஏதேதோ சொல்லிச் சமாளித்துத்
திரும்பினோம்.
இம்முறை எந்த முகத்துடன் போவது?
சமாதானத்துக்காகக் காத்திருக்கிறோமெனச்
சொல்வது
சாத்தியமாகுமா?
காறியல்லவா துப்புவர் எம் முகத்தில்?
"எங்களை விளம்பரப்பொருளாக்கி
விடுதலையை விற்பனையா செய்கின்றீர்"
என
எழுந்து கேட்பார்களே
என்ன பதிலுண்டு எங்களிடம்?
அற்புதங்களை ஆழக்குழியிட்டு மூடிவிட்டு
கற்பனைக்கு மாலையிட்டுக் களிக்கிறோம்.
இம்முறை துயிலுமில்ல வாசல்
திறக்கும்போதே
என்ன கொண்டுவந்தீர் எனக் கேட்டால்
பதிலேதும் உண்டா எம்மிடம்?
சம்பூ கொணர்ந்தோம்,
சவர்க்காரம் கொணர்ந்தோம்,
சீமெந்தும், முறுக்குக் கம்பியும்,
செல்போனும் கொணர்ந்தோம் என்று
சொல்லமுடியுமா அவர்களுக்கு?
எந்த முகத்தோடு இம்முறை துயிலுமில்லம்
செல்வது?
இராசதந்திரங்கள் இருப்பவர்களுக்கேயன்றி
இறந்துபோனவர்களுக்கல்ல.

தாகம் சுமந்து
கனவுகளுக்கு வடிவம் வரைந்துவிட்டு
கல்லறைக்குள்ளே கிடப்பவர் முன்னே
பொய்சொல்லுவதே பெரிய துரோகம்.
வேண்டாமய்யா இந்த வதை.
முகிலுக்குள்ளே
முகங்கொண்டுலவியது போதும்
இனியாயினும் நிலத்தில் இறங்குவோம்.
காலநீட்சி வேண்டுமெனில்
காத்திருக்கலாம்.
அது குற்றமும் அல்ல.
மாயக்கண்ணாடி முன்னே
மயங்குவதுதான்
மன்னிக்க முடியாதது.
கடற்கரை மணலில் கட்டிய வீட்டுக்கு
வர்ணம் பூசும் கிறுக்கரானோமா நாம்?
காற்றிலேற்றும் பட்டத்தின் வாலில்
கருங்கல் கட்டும் அறிவிலியரானோமா
நாம்?
உலகம் வலியனின் கையிற்தான்
சுழல்கிறது.
கேட்க நாதியற்றுக் கிடக்கிறது நீதி.
இடையில் வந்த அதலபாதாளம் நிரவி
விடுதலைத்தேர் நகர்த்தவேண்டும்.
காய்நகர்த்தியபடி எம் தலைமகன்.
களங்களை உற்றுப்பார்த்தபடி எங்கள்
தளபதிகள்.
இடைவெளிக்குள் நுழைந்து
வெளியேறும் வித்தையை
தெரிந்து வைத்திருப்பவனே
சேனாதிபதி.
புயலெதுவும் புடுங்கமுடியாத
புளியமரமல்லவா?
சிரித்தபடி தேதி கணக்கிட்டிருக்கும்.
முதுகில் விடுதலைச் சிறகு
முளைத்தவர்களுக்கு
பலவழிகள் கிடையாது.
ஒற்றைவழியே அவர்களுக்கு உண்டு
அது ஆகாயம்.
சுகன வெளியெங்கும் கைகளை
விரித்தபடி பறப்பர்.
ஈழத்தமிழன் விடுதலைக் குருவியடா.
வாயிற் சுதந்திரப் பாடலைப்
பாடியபடிதான்
புலம்பெயர்ந்த தேசத்திலும் இருப்பான்.
மாயக் கனவுகளிலிருந்து கொஞ்சம்
விடுபடுவானாயின்
இவனே மலையென்றாவான்
எவரும் எடுத்தசைக்க முடியாதபடி.
எம்மண்ணில் கார்த்திகை மாதம்
வருவது
கண்ணீர்விட அல்ல.
பூவொன்று பிடுங்கி வைப்பது
நாங்கள் உயிர் பிடுங்கியும்
வைப்போமென
உறுதி சொல்ல.
நெய்விளக்கேற்றுவது
உள்ளே நெருப்பேற்றி வைத்துள்ளோம்
என
உறவுகளுக்குக் காட்ட.
கார்த்திகை 26
புதிய உயிரொன்று தலைமையேற்கப்
பிறந்தநாள்.
கார்த்திகை 27
அதிக விலைகொடுக்க
வேண்டுமெனச் சொல்லி
அச்சாரம் கொடுத்த நாள்.
இரு நாட்களும் அருகென்றானது
தற்செயலான சம்பவங்களல்ல.
காலமளித்த தீர்ப்பு.
கடவுள் எழுதிய காப்பு.
நடந்துவந்த பாதையில் ஒரு
நாற்சந்தியில் நிற்கிறோம்.
நேர்வழி நடந்தால் விடுதலை.
மறுவழி போனால் சலுகைகள்.
இன்னொருவழியிலும் போகலாம்
அதில் உலகநாடுகள் வலைவிரித்து
வைத்துள்ளன.
உயிருறுஞ்சிவிட்டு
இறுதியில் தகனம் செய்யும்.
நாலாவது வழியிலும் போகமுடியும்.
நீந்திக் கடக்கக்கூடிய தூரத்திற்தான்
மறுமுனை.
சாம்பார், ரசம், மசாலப்பொடியுடன்
சாப்பாடும் கிட்டும்.
தர்மப் பொறிபோலக்காட்டி
வளைத்துப்பிடித்து
பின்னர் சாக்காட்டும்.
என்ன செய்யும் உத்தேசம் உனக்கு?
கார்த்திகை 27க்கு முன்னர் ஒரு
முடிவெடுத்தபடி
கல்லறைக்குப் போ.
சும்மா விளக்கேற்றி வரலாம் என்று
போனால்
"குழிப்பிள்ளை"களின் கேள்விக்குப்
பதிலின்றித் தவிப்பாய்.
'எங்கள் சாவுக்கு அர்த்தமுண்டா?
எங்கள் கனவுக்கு வடிவம் வருமா?
எங்கள் காத்திருப்புக்குப் பதில்
கிட்டுமா?'
துயிலும்மில்லம் அதிரக்கேட்கும்
பிள்ளைகளின் பேரொலி.
நெஞ்சு பிளக்க,
மூச்சுத்திணற,
விழிசோர, மொழிசோர நிற்பாய்.
கார்த்திகை 27க்கு முன்னர் முடிவெடு
போர்த்தொழில் வீரரான வடிவெடு.

**வியாசன்**

